

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 108 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 11 – திங்கள்கிழமை 27 நவம்பர் 2023 – சென்னை 72 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 108: Thiruvalluvar Year - 2054 - Karthigai 11 - Monday 27 November 2023 - Chennai 72 Pages ₹ 5.00


# கழகம் வில்லாம்.. நின் அணியே கணையாம்!



நம் உயிரினும் மேலான தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.

“வாழ்வில் ஓர் பொன்னாள்” என்று சொல்வது போல ஒரு சில நாட்கள் அமையும். போராட்டங்களும் நெருக்கடிகளும் சூழ்ந்த பொதுவாழ்வில் ஆட்சி என்பது சொகுசானதல்ல, அது கூடுதல் பொறுப்பாகும்.

அந்தப் பொறுப்பையேற்று, வருங்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வையுடன் மக்கள் நலன் காக்கும் திட்டங்களையும், மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்களை வருங்காலத் தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நினைவுச் சின்னங்களையும் உருவாக்கும்போது மகிழ்வான தருணங்களாக அமையும். அத்தகைய நாட்கள் ஒவ்வொன்றும் வாழ்வில் ஒரு பொன்னாள்தான். இன்று அத்தகைய ஒரு பொன்னாள்.

அதற்குக் காரணம், சமூகநீதிக் காவலர் - இந்திய ஒன்றியத்தின் ஏழாவது பிரதமர் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலையைத் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில், அதுவும் நான் பயின்ற மாநிலக் கல்லூரியில் முதலமைச்சர் என்ற முறையில் இன்று திறந்து வைக்கும் பெருமிதமான நிகழ்வு நடைபெறுகிறது. உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு.அகிலேஷ் யாதவ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ள, திரு. வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி.சீதாசிங் மற்றும் வி.பி.சிங் அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்கும் இனிய விழாவாக அது அமையவுள்ளது.

எமர்ஜென்சி காலத்தில் திரு.ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் மேற்கொண்ட மாற்று அரசியல் கூட்டணிக்குப் பிறகு, இந்தியாவில் வலுவான ஒரு மாற்று அணி அமைந்தது என்றால் அது 1988ஆம் ஆண்டில் உருவான தேசிய முன்னணிதான். அதன் உருவாக்கத்தில் மிக முக்கியப் பங்கு வகித்தவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியான முரசொலி மாறன் அவர்கள், டெல்லியின் அரசியல் தட்பவெப்ப நிலை அறிந்தவர். அவருடைய பங்களிப்பும் இதில் முக்கியமானது. அது மட்டுமல்ல, அண்டை மாநிலமான ஆந்திராவின் முதலமைச்சராக இருந்த என்.டி.ராமராவ் அவர்களை ‘கன்வீனராக’க் கொண்ட தேசிய முன்னணியின் தொடக்க விழா, 1988ஆம் ஆண்டு முப்பெரும் விழா நேரத்தில், சென்னையில்தான் மிகப் பிரம்மாண்டமான பேரணியுடனும் பொதுக்கூட்டத்துடனும் நடைபெற்றது.

## உங்களில் ஒருவன்

திராவிட முன்னேற்றக் கழகம், தெலுங்கு தேசம், ஜன மோர்ச்சா, ஜனதா, காங்கிரஸ் (எஸ்), அசாம் கண பரிஷத், லோக் தளம் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து தேசிய முன்னணி உருவானது. தலைவர் கலைஞர் அவர்களுடன் வி.பி.சிங் அவர்களும், என்.டி.ராமராவ் உள்ளிட்ட தலைவர்களும் பார்வையிட்ட தேசிய முன்னணி தொடக்க விழாப் பேரணியில் கழகத்தின் இளைஞரணி வீறுநடை போட்டு அணிவகுத்து வந்தபோது மிகப் பெரிய அளவில் எழுச்சி ஆரவாரத்தைக் காண முடிந்தது.

**இளைஞரணி உருவாக்கப்படுவதற்கு முன்பு வரை தி.மு.கழகத்தின் மாநாடுகளையொட்டியும், சிறப்பு நிகழ்வுகளின் போதும் தொண்டர்கள் அணிவகுத்து வருவதற்கு ‘ஊர்வலம்’ என்றுதான் பெயர். இளைஞரணி உருவான பிறகே, ஊர்வலம் என்பது ‘பேரணி’ என்று பெயர் பெற்றது.**

தி.மு.கழகத் தொண்டர்களை, ‘உடுப்பணியாத ராணுவம்’ என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த உடுப்பணியாத ராணுவம், கலைஞர் காலத்தில் உருவாக்கப்பட்ட இளைஞரணியால், உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையில் சீருடை தரித்து, உடுப்பணிந்த ராணுவம் போல பேரணிகள் பலவற்றை பீடுநடைபோட்டு, பெருமிதத்துடன் நடத்திக் காட்டியது.

**தேசிய முன்னணி தொடக்க விழாப் பேரணி அறிவாலயத்தில் தொடங்கி, அண்ணா மேம்பாலத்தில் ஏறி, அண்ணா சாலையில் அணிவகுத்தபோது “வங்கக் கடல்தான் மனிதத் தலைகளாகத் தலைநகர் சென்னையில் புகுந்ததோ” என்று அகில இந்தியத் தலைவர்கள் பலர் வியக்கும் வகையிலும், தி.மு.க.வின் அரசியல் எதிரிகள் வியர்க்கும் வகையிலும் பிரம்மாண்டமாக அமைந்தது.**

அதன்பிறகு, 1990ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டிலும், அதே ஆண்டு முப்பெரும் விழாவை ஐம்பெரும் விழாவாக (பெரியார் - அண்ணா - தி.மு.கழகம் பிறந்த நாள் ஆகியவற்றுடன் டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு மற்றும் மண்டல் கமிஷன் வெற்றி விழா இவற்றையும் இணைத்து) கொண்டாடியபோது, தலைநகர் சென்னை குலுங்க மற்றொரு மாபெரும் பேரணி நடைபெற்றது. இந்த மூன்று பேரணிகளிலும் உங்களில் ஒருவனான என் தலைமையில் பட்டாளத்துச் சிப்பாய்கள் போல கழகத்தின் இளைஞரணியினர் வெண் சீருடையில் வீறுநடை போட்டு வந்ததை சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் கண்டு மகிழ்ந்ததையும், அது குறித்து அவர் ஆச்சரியத்துடன் வினவியபோது, “என் மகன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டி, என் உழைப்புக்கு அங்கீகாரம் வழங்கியதையும் மறக்க முடியாது.

இளைஞரணியின் பிரம்மாண்டமான பேரணியுடன் தொடங்கப்பட்ட தேசிய முன்னணிக்கு தேர்தல் களத்தில் முதல் மகத்தான பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்தவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர்தான். அவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் 1989 ஜனவரியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, 13 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு ஆட்சியை அமைத்தது. திரு.வி.பி.சிங் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தான் கட்டி முடித்த வான்புகழ் வள்ளுவர் கோட்டத்தில் முதல் முறையாக கால் பதித்து, மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றார். உங்களில் ஒருவனான நான் முதன்முதலாக ஆயிரம்விளக்கு தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக வெற்றி

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



## முன்னாள் இந்தியப் பிரதமர்

# சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கிற்கு சென்னையில் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, நவ. 27-**

**முன்னாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களுக்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார்.**

தமிழ்நாடு அரசின் சார்பில், மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை, மாநிலக் கல்லூரியில் ரூபாய் 52 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (27.11.2023) காலை 11.00 மணியளவில் அன்னாரது திருவுருவச் சிலை யினை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார்கள்.

விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள் 1931-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாள் அலகாபாத் நகரில் ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாக பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை டேராடூன் கர்னல் பிரவுன் பள்ளியிலும், பின்பு புனே பெர்குஷன் கல்லூரியில் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார். பின்பு, 1950 ஆம் ஆண்டு அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று பட்டம் பெற்றார். மேலும், இவர் சட்டக் கல்லூரி படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து, சர்வோதய சமாஜத்தில் இணைந்து, பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்து தனது நிலங்களை தானமாக வழங்கினார்.

வி.பி.சிங் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், வர்த்தகத்துறை துணை அமைச்சர் போன்ற பல்வேறு பதவிகளையும் வகித்தார். இதனைத் தொடர்ந்து, 1980-ஆம் ஆண்டு உத்திரபிரதேசத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று உத்திர பிரதேச மாநில முதலமைச்சராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நல்ல திட்டங்களை கொண்டு வந்து சிறந்த முதலமைச்சராக திகழ்ந்தார்.



இதனைத் தொடர்ந்து, வி.பி. சிங் அவர்கள் 1984-ஆம் ஆண்டு நிதியமைச்சர் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய பதவிகளையும் வகித்தார். பின்பு, 1989 - ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதமராக இருந்த போது தமிழ்நாட்டு மக்களின் வாழ்வதார பிரச்சனையான காவிரி நதி நீர் பிரச்சனைக்கு தீர்ப்பாயத்தை அமைத்து தந்தார்.

சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காம ராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டினார். அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வி.பி.சிங் அவர்களை பற்றி குறிப்பிடும் போது “அரசியல் நாகரீகத்துக்கும், பண்பாட்டுக்கும், உயர்ந்த லட்சியங்களுக்கும் அடையாளச் சின்னமாக விளங்கியவர்” என்று கூறினார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக B.P. மண்டல் அவர்கள் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால் சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்திற்கு அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை செயல்படுத்திய சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் ஆவார்.

இத்தகைய சிறப்புமிக்க மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் அன்னாரது திருவுருவச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் உத்திரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், அமைச்சர் பெருமக்கள், அன்னாரது குடும்பத்தினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**கலைஞர் அவர்கள் எழுதிய இளைஞர்களுக்கு வழிவிடுவோம்! (6) “இளமை முழக்கிய பொதுமை முரசம்” கடிதம் நாளை வெளிவரும். இதனையடுத்து “இளைஞர்களுக்கு வழிவிடுவோம்!” கலைஞரின் கடிதங்கள் தொடர்ந்து வெளிவரும்!**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 27-11-2023

# பஞ்சாப் தீர்ப்பைப் படித்துத் திருந்தவும்!

**தமிழ்நாடு ஆளுநர் ரவி என்னவெல்லாம் சொல்லி வந்தாரோ, அவை அனைத்தும் அபத்தக் களஞ்சியம் என்பதை பஞ்சாப் மாநிலம் தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.**

★ ஆளுநர் என்பவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர். அவர் பெயரளவில் தான் மாநிலத்தின் தலைவராக இருக்கிறார். ஆளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி சில அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்களை வைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகள் சட்டமியற்றும் வழக்கமான பணிகளை முறியடித்துவிட முடியாது.

★ அரசியல் சட்டத்தின் 200 ஆவது பிரிவின் படி ஒரு சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கு ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் கூடிய விரைவில் அந்த முடிவை எடுக்க வேண்டும். முடிவு எடுக்காமல் காலதாமதம் செய்வதோ, அதனை அப்படியே நிறுத்தி வைப்பதோ முடியாது. எந்த செயல்பாடும் இல்லாமல் சட்டமுன்வடிவை நிறுத்தி வைக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. மறுபரிசீலனை செய்ய சட்டமன்றத்துக்கு அவர் அனுப்பி வைக்கலாம். திருத்தம் செய்தோ திருத்தம் செய்யாமலோ மீண்டும் அந்த சட்டமுன்வடிவை அரசு ஆளுநருக்கு அனுப்பி வைக்கலாம். அப்படி மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் சட்டமுன் வடிவுக்கு ஆளுநர் ஒப்புதல் தருவதைத் தவிர வேறு வழியில்லை.

★ மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்டமுன்வடிவுகளை 'நிறுத்தி வைக்கிறேன்' என்று சொல்வது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையின் சட்டமியற்றும் செயல்பாட்டை தடுப்பது போல் அமைந்து விடும். நாடாளுமன்ற ஜனநாயகத்தில் உண்மையான அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் தான் உள்ளது.

இவை அனைத்தும் பஞ்சாப் மாநில ஆளுநரின் நடத்தை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு கூறிய தீர்ப்பின் உள்ளடக்கம் ஆகும். இதே போன்ற ஒரு வழக்கு தான் கேரள ஆளுநருக்கு எதிராகவும் உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. அப்போதும் நீதிபதிகள், " பஞ்சாப் மாநில அரசு தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளோம். அதனை ஆளுநரின் செயலாளர் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்று சொல்லி இருக்கிறார்கள். இதே போன்றது தான் தமிழ்நாடு ஆளுநருக்கு எதிரான வழக்கும். அதிலும் இப்படித்தான் தீர்ப்பு வரும்.

**கடந்த ஏப்ரல் மாதம் ஆளுநர் ரவி என்ன சொன்னார் தெரியுமா? 'கிடப்பில் இருந்தாலே நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். நீண்ட நாட்களாக கிடப்பில் வைக்கப்பட்டுள்ள மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். வார்த்தை அலங்காரத்துக்காக அதனை நிறுத்தி வைப்பு என்கிறோம்' என்று பேசினார். மாணவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர்கள் மத்தியில் இப்படி பேசினார்.**

**ரகசியக் காப்பு உறுதிமொழி எடுத்துள்ள ஒருவர், நிர்வாக ரீதியாக தான் எடுக்கும் நிலைப்பாடு குறித்து பொதுவெளியில் இப்படி அலட்சியமாகக் கருத்துகளை வெளிப்படுத்துவது அரசியல் சட்ட வரையறைகளை மீறிய செயல் ஆகும். அதனைத் தான் ரவி இது வரை செய்து வருகிறார். மாநிலத்தின் கவர்னராக இல்லாமல், இந்த மாநிலத்தின் மன்னராக அவர் நினைத்துக் கொள்கிறார்.**

"... The Governor, as an unelected Head of the State, is entrusted with certain constitutional powers. However, this power cannot be used to thwart the normal course of lawmaking by the State Legislatures. Consequently, if the Governor decides to withhold assent under the substantive part of Article 200, the logical course of action is to pursue the course indicated in the first provision of remitting the Bill to the state legislature for reconsideration. In other words, the power to withhold assent under the substantive part of Article 200 must be read together with the consequential course of action to be adopted by the Governor under the first proviso. If the first proviso is not read in juxtaposition to the power to withhold assent conferred by the substantive part of Article 200, the Governor as the unelected Head of State would be in a position to virtually veto the functioning of the legislative domain by a duly elected legislature by simply declaring that assent is withheld without any further recourse. Such a course of action would be contrary to fundamental principles of a constitutional democracy based on a Parliamentary pattern of governance. Therefore, when the Governor decides to withhold assent under the substantive part of Article 200, the course of action which is to be followed is that which is indicated in the first proviso. The Governor is under Article 168 a part of the legislature and is bound by the constitutional regime" என்று தெளிவாகச் சொல்லப்பட்டு விட்டது அந்தத் தீர்ப்பில். பக்கம் 16. வரிசை எண் 25.

**'கிடப்பில் போடவும் கூடாது, நிறுத்தி வைக்கவும் கூடாது, அதற்கான எந்த உரிமையும் தகுதியும் ஆளுநர்களுக்குக் கிடையாது' என்று சொல்லி இருக்கிறது உச்சநீதிமன்றம். தேவையில்லாத சக்கைகளைப் படிப்பதை நிறுத்திவிட்டு, இதைப் படிக்கட்டும் ஆளுநர். திருந்தட்டும் ஆளுநர்.**

## சென்னையில் நேற்றிரவு கனமழை!

சென்னை,நவ.27-

சென்னை, செங்கல்ட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை வேலூர், தருமபுரி, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்ளிட்ட 22 மாவட்டங்களில் அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாகவே பல்வேறு இடங்களிலும் நல்ல மழை பெய்து வருகிற நிலையில், இந்த மழை தொடரும் என்றே எதிர்பார்க்கப் படுகிறது.

சென்னையை பொறுத்த வரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (26.11.2023) சென்னையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் – ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர். இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஏறத்தாழ 5 லட்சம் இளைஞர்கள் பங்கேற்கும்

# சேலம் - இளைஞர் அணி மாநாட்டை எழுச்சியோடு நடத்துவோம்!

## கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

சென்னை, நவ. 27-

கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நேற்று காலை (26.11.2023) நடைபெற்று முடிந்து, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

கலைஞர் அரங்கம் புதுப்பிக்கப்படுவதால் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இந்த ஹோட்டலில் நடைபெற்றது. இரண்டு முக்கியமான முன்னெடுப்புகளுக்காக இந்தக் கூட்டத்தைத் தலைவர் அவர்கள் கூட்டியிருந்தார்கள்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பணிகளை ஆறு மாதங்களுக்கு முன்பே தி.மு.க. சார்பில் தொடங்கி விட்டோம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தமிழ்நாடு முழுவதும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு மண்டல வாரியாகப் பயிற்சி பாசறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஐந்து மண்டலங்களில் மிகப்பெரிய மாநாடுகளைப் போல இக்கூட்டங்களை நடத்தி முடித்திருக்கிறோம்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் உறுப்பினர்களின் அடுத்த கட்டப் பணிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்களுக்குச் சொல்லப்பட்டது. தேர்தல் எப்போது வந்தாலும் சந்திக்கக் கூடிய அளவுக்கு தயாராக இருக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

எங்களது அடுத்த மிக முக்கியமான பணி என்பது சேலத்தில் நடைபெறக் கூடிய இளைஞரணி மாநில மாநாட்டை சிறப்போடும் எழுச்சியோடும் நடத்திக் காட்ட வேண்டும் என்பதாகும். மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை தலைவர் அவர்கள் கூட்டியதன் மிக முக்கியமான நோக்கமே இதுதான்.

**உதயநிதி தலைமையில் நடைபெறும் மாநாடு!**

தி.மு.க. மாநாடு நடக்கிறது என்றால் அதனுடைய எழுச்சி என்பது தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இருக்கும். அதிலும் குறிப்பாக இது இளைஞரணி மாநாடு. அன்புச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள் இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஏராளமான இளைஞர்கள் கழகத்தை நோக்கி ஈர்க்கப்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அவர் செல்லும் ஊர்களில் எல்லாம் புதிய புதிய இளைஞர்கள் கழகத்தை நோக்கி வருகிறார்கள்.

கழக அரசும் இளைஞர்களுக்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டி வருகிறது. இதுவும் இளைஞர்களைத் தி.மு.க. நோக்கி வர வைக்கிறது. இந்த இளைய பட்டாளத்தைக் கட்டுக் கோப்பாகவும் நம்முடைய திராவிடக் கொள்கை கொண்டவர்களாகவும் ஆக்குவதற்காகத்தான் இளைஞரணி மாநாட்டை நடத்த வேண்டும் என்று தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் - அன்றைய இளைஞரணிச் செயலாளராக இருந்தபோது 2007ஆம் ஆண்டு இளைஞரணியின் முதல் மாநில மாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றது. இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் வருகிற டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறுகிறது. இது ஒருநாள் மாநாடாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக இருந்து நான் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறேன்.

காலை 9 மணி அளவில் கழகத்தின் இருவண்ணக் கொடியை மகளிரணிச் செயலாளர் - திருமதி. கனிமொழி எம்.பி. அவர்கள் ஏற்றி வைக்கிறார்கள். மாணவரணிச் செயலாளர்



சி.வி.எம்.பி.எழிலரசன் மாநாட்டைத் திறந்து வைக்க உள்ளார்கள். முக்கியப் பேச்சாளர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகிறார்கள். தலைவர் அவர்கள் மாலை 6 மணிக்கு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த இளைஞரணி மாநாடு கழக வரலாற்றில் மட்டுமல்ல தமிழ்நாடு வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் முக்கியமான மாநாடாக அமையப் போகிறது. அடுத்து வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குச் சேலம் மாநாடு அடித்தளம் அமைக்கும் மாநாடாக அமையப் போகிறது.

கிட்டத்தட்ட 5 லட்சம் கழகத் தோழர்கள் - இளைஞரணித் தோழர்கள் வருவார்கள் என்று அதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். இவர்களுக்கு எழுச்சியும் உணர்ச்சியும் ஊட்டும் மாநாடாக இது அமையப் போகிறது.

அனைவரையும் மாநாட்டுக்கு வாருங்கள் என்று அழைப்பதைப் போல ஊடகங்களைச் சேர்ந்த உங்களையும் அழைக்கிறேன்.

**கேள்வி:** இந்த மாநாட்டிற்கு ஏதேனும் தீம் இருக்கிறதா?

**மாநாட்டின் நிறைவில் கழகத் தலைவர் உரை!**

**பதில்:** பல தலைவர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்ற இருக்கிறார்கள். அப்போது அது சொல்லப்படும். திரும்ப வரும் போது என்னென்ன தலைப்புகளில் யார் யார் உரையாற்ற இருக்கிறார்கள் என்பது சொல்லப்படும். எழிலரசன் மாநாட்டைத் திறந்து வைக்கிறார். திருமதி கனிமொழி கருணாநிதி கொடி ஏற்றி வைக்கிறார். நான் ஒருங்கிணைப்பாளராக இருந்து பணி ஆற்றுகிறேன். காலை கொடி ஏற்றுவார்கள். 9 மணிக்கு மாநாட்டைத் திறந்து வைப்பார்கள். கழகத் தலைவர் 6 மணிக்கு உரையாற்றுவார்கள். நம்முடைய உதயநிதி அவர்கள் தலைமை ஏற்பார்கள். இதுதான் செய்தி.

**கேள்வி:** நாடாளுமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு இந்த மாநாடு. தேர்தலுக்கு இது எந்த அளவிற்கு இது பயனுள்ளதாக இருக்கும்?

**பதில்:** தேர்தலுக்கு இது ஒரு முன்னோட்டமாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.



### போலி அறிவியலைப் புகுத்தி – சிறந்த மருத்துவக் கட்டமைப்பை சிதைக்க முற்படும் – ஒன்றிய

# பா.ஜ.க. அரசிடமிருந்து மருத்துவத்தையும் – நாட்டையும் மீட்போம்!

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 27 -**

**போலி அறிவியலைப் புகுத்தி, சிறந்த மருத்துவக் கட்டமைப்பை சிதைக்க முற்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து மருத்துவத்தையும் – நாட்டையும் மீட்போம் என்று சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க மாநாட்டில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் தமிழ்நாடு மாநில 4ஆவது மாநாடு, 20ஆம் ஆண்டு தொடக்க விழா, மற்றும் TNMSA TNDSA கருத்தரங்கில் காணொலி வாயிலாக ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெறும் தமிழ்நாடு மாநில 4ஆவது மாநாடு, 20ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் TNMSA TNDSA கருத்தரங்கில் பங்கேற்றிருக்கும் அனைவருக்கும் வணக்கம்!

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா. நோயால் உடலும் உள்ளமும் துவண்டு போகும் ஏழைகளுக்கு உரிய சிகிச்சை கொடுத்து, அவர்களைக் குணப்படுத்தி, அவர்களின் முகத்தில் புன்னகையை வர வைப்பவர்கள் – மருத்துவர்கள்!

**உயிர்களைக் காப்பாற்றுவது சமூகத்திற்கு செய்கிற சேவை!**

மனித உயிர்களைக் காக்கும் மகத்தான பணியைத்தான், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஜி.ஆர்.ரவீந்திரநாத் உள்ளிட்ட அனைத்து டாக்டர்களும் மேற்கொண்டிருக்கிறீர்கள்.

20 ஆண்டுகாலமாக இந்தச் சங்கத்தை சிறப்பாக நடத்தி, அதன் 4ஆவது மாநாட்டை எழுச்சியோடும் இலக்கோடும் நடத்தி வருவதை பாராட்டுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன்.

உயிர்களைக் காப்பாற்றுவது என்பது, உங்களின் தொழில் மட்டுமல்ல; சமுதாயத்திற்கு நீங்கள் செய்கிற சேவை! அப்படிப்பட்ட சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வேண்டும். சமத்துவம் இல்லை என்றால், அது ஆரோக்கியமான சமுதாயமாக இருக்க முடியாது. பிறப்பு மற்றும் சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளால் சமுதாயத்தின் சமத்துவம் சீர்குலைந்து நோய்வாய்ப்பட்டிருந்தால், அதற்குத் தேவையான சிகிச்சைதான், சமூகநீதி!

**நீதிக்கட்சி மூலம் சமூக நீதி என்ற சிகிச்சையை சமுதாயத்திற்கு தந்தார்கள்!**

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், அந்தச் சமூக சிகிச்சையை, அரசியல் சட்டத்தின் மூலமாகக் கொடுத்தார். நம்முடைய தமிழ்நாட்டில் அந்தச் சிகிச்சையை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர்கள் மருத்துவர்கள். முறையாக மருத்துவம் படித்து மக்களுக்குச் சிகிச்சை அளித்து வந்த டாக்டர் நடேசனாரும், டாக்டர் டி.எம். நாயரும் பிட்டி.தியாகராயருடன் இணைந்து

## கழக இளைஞர் அணி தொடங்கிய கையெழுத்து இயக்கம் மக்கள் இயக்கமாக மாறிவிட்டது! 'நீட்' விலக்கு நிறைவேறியே தீரும்!

நீதிக்கட்சி என்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்கி, சமூகநீதி என்ற சிறப்பான சிகிச்சையை சமுதாயத்திற்குத் தந்தார்கள். அந்த சிகிச்சையைப் பனகல் அரசர் சிறப்பாக நடைமுறைப்படுத்தினார்.

தந்தை பெரியார் அந்தச் சிகிச்சையை அறுவை சிகிச்சையாக மாற்றினார். நெடுங்காலமாகச் செல்லரித்துப் போயிருந்த பகுதிகளைப் பெரியார் அகற்றினார். புதிய ரத்த அணுக்கள் உருவாகிற வகையிலான சிகிச்சையைப் பேரறிஞர் அண்ணா வகுத்தளித்தார். அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி, நோயற்ற நலமான சமூகத்தைப் படைத்தார் டாக்டர் கலைஞர்.

தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவிற்கே சமூகநீதி சிகிச்சையை முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மூலம் கிடைக்கச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் வாழும் 'இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு' சமூக நீதி என்ற சிகிச்சையை வழங்கியவர் வி.பி.சிங்.

**கடந்த 10 ஆண்டுகளாக மருத்துவத்தில் சமூக நீதிக்கு எதிரான செயல்பாடுகள்!**

தன்னுடைய ஆட்சியே பறிபோனாலும் சமூகநீதிக் கொள்கையில் இருந்து பின் வாங்க மாட்டேன் என்று உறுதியாக நின்ற அந்தப் பெருமகனாரைப் போற்றுகிற வகையில் அவரின் திருவுருவச் சிலையை இந்தியாவிலேயே முதன் முறையாக நம்முடைய தமிழ்நாட்டின் தலைநகரான இந்தச் சென்னையில் நாளை (இன்று) திறந்து வைக்கப் போகிறோம். இது நம்முடைய திராவிட மாடல் அரசுக்குக் கிடைத்த பெருமை! இந்தப் பெருமையும் பெருமிதமும் இருக்கும் அதேசமயம், நமக்கு முன்பு இருக்கும் சவால்களையும் உணர்ந்துதான் இருக்கிறோம்.

மருத்துவத் துறையில் கடந்த 10 ஆண்டுகளாக சமூகநீதிக்கு எதிரான சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் எதிர்கொள்கிறோம். இந்தச் சவால்கள் அனைத்தும், தமிழ்நாட்டில் சிறப்பாக இருக்கும் மருத்துவக் கட்டமைப்புகளை சிதைப்பதோடு, மருத்துவம் படித்து, டாக்டர்களாகிச் சமுதாயத்திற்குச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று நினைக்கும் மாணவர்களின் உணர்வுகளையும், கனவுகளையும் பாழாக்குகிறது.

**சிறந்த மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கித் தந்தவர் கலைஞர்!**

இந்திய மாநிலங்களில் மிகச்சிறப்பான மருத்துவக் கட்டமைப்பை கொண்டுள்ள மாநிலம், தமிழ்நாடு! சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் பன்னோக்கு மருத்துவமனைகள், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தலைமை மருத்துவமனைகள்,

## இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஒப்பிட இயலாத வகையில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசின் மருத்துவக் கட்டமைப்பு!

நகரங்கள் எல்லாவற்றிலும் அரசு பொது மருத்துவமனைகள், கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று அனைத்து மக்களுக்கும் உரிய நேரத்தில் உடனடி சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்புகளை, அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்.

அடுத்தடுத்து வந்த ஆட்சிகளிலும், கலைஞர் உருவாக்கிய கட்டமைப்புகளைத் தவிர்க்க முடியாமல், வளர்த்தெடுத்தார்கள். இந்தியாவில் கிராமப்புற மக்களுக்கான மருத்துவமனைகள், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட கட்டமைப்புகள் போதுமான அளவில் இல்லாத சூழலில், தமிழ்நாட்டின் 'திராவிட மாடல்' குக்கிராமம் வரை சிறப்பான பொது மருத்துவக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதை இந்தத் துறையின் வல்லுநர்கள் பலர் சுட்டிக் காட்டியிருப்பதோடு, தமிழ்நாட்டின் திராவிட மாடலை, மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

முதுநிலை மருத்துவப் படிப்பில் அகில இந்திய ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்து மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் உச்



சநீதிமன்றம் வரைக்கும் சென்று வாதாடியபோது, சமூக சமத்துவத்துக்கான மருத்துவர்களான நீங்கள் அனைவரும் ஆதரவாக நின்றீர்கள். அந்தச் சட்டப்போராட்டத்தில் வெற்றி பெற்றோம். அதனால், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களில் வாழுகிற இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான மருத்துவப் படிப்பை உறுதி செய்தோம்.

**தமிழ்நாடு அரசின் சுகாதாரத்துறை சிறந்த சேவையாற்றி வருகிறது!**

பொது நுழைவுத்தேர்வு முறையை 2007ஆம் ஆண்டு முழுமையாக ரத்து செய்து, அதற்கான சட்ட ஏற்பையும் குடியரசுத் தலைவர் மூலமாகப் பெற்றவர் முத்தமிழறிஞர் கலைஞர். டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் தலைமையிலான கமிட்டி மூலமாக, உரிய தரவுகளைச் சேகரித்து, கலைஞர் தலைமையிலான அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான், +2 மதிப்பெண் அடிப்படையில், கிராமப்புற ஏழை எளிய – பின்தங்கிய ஒடுக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளும் டாக்டர் ஆக முடியும் என்ற நிலை உருவானது.

அதனால்தான், பன்னோக்கு மருத்துவமனைகள் தொடங்கி ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரைக்கும், தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரத் துறை சிறப்பான மருத்துவ சேவையை வழங்கி வருகிறது. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் இந்தக் கட்டமைப்பை சிறப்பாகக் கையாண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட, வளர்த்தெடுக்கப்பட்டுள்ள மருத்துவக் கட்டமைப்போடு, இந்தியாவின் வேறெந்த மாநிலத்தையும் ஒப்பிடவே முடியாது. ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடத்தக்க அளவில்தான் நம்முடைய மருத்துவக் கட்டமைப்புகள் வளர்ந்திருக்கிறது என்பதை ஹிந்து ஆங்கில நாளேட்டில் எழுதி, The Dravidian Model of Public Health என்ற கட்டுரையில் பேராசிரியர் சக்திராஜன் ராமநாதன் அவர்களும் பேராசிரியர் சுந்தரேசன் செல்லமுத்து அவர்களும் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள்.

**எனது தலைமையிலான திராவிட மாடல் அரசைப் பாராட்டி வெளிவந்த கட்டுரை!**

மக்கள் நல்வாழ்வுத்துறையில், உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசின் நடைமுறைகளை, இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் பின்பற்றினால், சமூக முன்னேற்றத்தை எளிதாக்கலாம் என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டு, "தகுதி மற்றும் சமூகத் தாக்கங்கள் பற்றிய பரந்த புரிதல் தமிழ்நாடு அரசுக்கு உள்ளது" என்றும் எழுதியிருக்கிறார்கள்.

இதைத் தனிப்பட்ட மு.க.ஸ்டாலினுக்கான பாராட்டுப் பத்திரமாக நான் கருதவில்லை! சமூகநீதியை எல்லாத் துறைகளிலும் நிலைநாட்டுகிற நோக்கத்தின் நூற்றாண்டு காலமாக இயங்கி வரும் திராவிட இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்தின் தோளோடு தோள் நிற்கும் சமூகநீதி இயக்கங்களுக்குமான ஒட்டுமொத்த பாராட்டாகத்தான் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட பாராட்டுகள், நம்முடைய மகிழ்ச்சியை அதிகமாக்கி, நாம் இன்னும் சிறப்பாக செயல்படத் தூண்டுகோல் ஆகிறது. மக்களுக்கு நல்ல தரமான சிகிச்சையைத் தருகிறது.

கடந்த இரண்டரை ஆண்டுகளில்,

★ 'மக்களைத் தேடி மருத்துவம்',

★ 'இன்னுயிர் காப்போம் – நம்மை காக்கும் 48',

★ 'புதுப்பிக்கப்பட்ட வருமுன் காப்போம் திட்டம்',

> **மக்களின் உயிர் காத்து, அவர்களின் ஆயுளை நீட்டிக்கும் நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்கிற வகையில் Mixopathy (மிக்ஸோபதி), ஒருங்கிணைந்த மருத்துவம், Common Foundation Course, வேதகால மருத்துவம், ஆன்மீக மருத்துவம், சோதிட மருத்துவம் என்று போலி அறிவியலைத் திணிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டு இருப்பதால் அதை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையுணர்வோடும் இந்த மாநாடு நடந்துகொண்டு இருக்கிறது. மருத்துவர்களான உங்களின் அறிவுப்பூர்வமான – உணர்வுப்பூர்வமான போராட்டத்தில் நாங்கள் துணை நிற்கிறோம்.**

★ 'விரிவாக்கப்பட்ட முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' உள்ளிட்ட பல திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**உலகளவில் ஏற்படுகிற மருத்துவ வளர்ச்சி நம் மாநிலத்திலும்!**

நாம் ஆட்சிக்கு வந்தபோது, கொரோனா இரண்டாவது அலை மோசமாக இருந்தது. அப்போது மக்களின் மனநிலை எவ்வாறு இருந்தது'; ஆனால் நாம் ஆட்சிக்கு வந்து எடுத்த சுகாதார நடவடிக்கைகளால் மக்கள் கொஞ்சம் நாளிலேயே எவ்வளவு நம்பிக்கையோடு நடமாடத் தொடங்கினார்கள் என்று நமக்கும் தெரியும்; நாட்டுக்கும் தெரியும்!

உலகளவில் அறிவியல் துறையில் நடக்கும் புதிய ஆராய்ச்சிகளையும் – மருத்துவத்துறையில் ஏற்படுகிற வளர்ச்சிகளையும் உடனுக்குடன் கவனித்து, தமிழ்நாட்டில்செயல்படுத்துவதன்விளைவாகத்தான் பன்னோக்கு மருத்துவமனைகள், சிறப்பு நோக்கு மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் சிறப்பான சிகிச்சையை வழங்கி வருகிறது.

அறிவியலுக்குப் புறம்பான மருத்துவ முறைகள், பொதுமக்களைச் சோதனை எலிகளாக மாற்றிடும் அபாயம் கொண்டவை. இந்தியா சோதனை எலியாக மாறிடுமோ என்ற அச்சம் சமூக சமத்துவ மருத்துவர்கள் சங்கத்தைச் சார்ந்த உங்களிடம் இருப்பதை உணருகிறேன்.

ஏன் என்றால், மக்களின் உயிர் காத்து, அவர்களின் ஆயுளை நீட்டிக்கும் நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்கிற வகையில் Mixopathy (மிக்ஸோபதி), ஒருங்கிணைந்த மருத்துவம், Common Foundation Course, வேதகால மருத்துவம், ஆன்மீக மருத்துவம், சோதிட மருத்துவம் என்று போலி அறிவியலைத் திணிக்கும் முயற்சிகள் நடந்து கொண்டு இருப்பதால் அதை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையுணர்வோடும் இந்த மாநாடு நடந்துகொண்டு இருக்கிறது. மருத்துவர்களான உங்களின் அறிவுப்பூர்வமான – உணர்வுப்பூர்வமான போராட்டத்தில் நாங்கள் துணை நிற்கிறோம்.

**தமிழ்நாட்டு மருத்துவக் கட்டமைப்பை சிதைக்க வந்த 'நீட்' தேர்வு!**

தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கும் மருத்துவக் கட்டமைப்புகளை சிதைக்கும் வகையில், முதலில் நீட் தேர்வு திணிக்கப்பட்டது. மாணவி அனிதா தொடங்கி மாணவர் ஜெகதீஸ்வரன் வரை பல பேரின் உயிரை நீட் என்கிற கொடுவாள் பறித்தது. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவதற்கான சட்டப் போராட்டத்தை நாம் உறுதியோடு முன்னெடுத்திருக்கிறோம். நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது என்ற ஆணவத்தோடு யார் பேசினாலும், எந்தப் பதவியில் இருப்பவர்கள் சொன்னாலும், நீட் விலக்கு என்கிற நம் இலக்கு, மக்களின் பேராதரவுடன் நிறைவேறியே தீரும். அதற்காக தி.மு.கழகத்தின் இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி இணைந்து உங்களைப் போன்றவர்களின் ஆதரவோடு தொடங்கிய கையெழுத்து இயக்கம், இன்றைக்கு மக்கள் இயக்கமாக மாறியிருக்கிறது.

நாம் நீட்டை எதிர்க்கும் நேரத்தில், நெக்ஸ்ட் தேர்வு என்று அடுத்த ஆபத்து நுழைகிறது. அதையும் வீறு கொண்டு எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் என்பதை நிரூபித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதன் காரணமாக, தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பு வலுப்பெற்றுள்ள நிலையில், எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்புக்கான இடங்களைக் குறைப்பதற்கும், புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பதற்கும் ஒன்றிய அரசு தடை விதிக்கும் போக்கையும் எதிர்த்தோம்.

**எல்லா வகையிலும் மாநில உரிமைகளுக்கு எதிரான செயலில் பா.ஜ.க. அரசு!**

அதுபோலவே, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் மருத்துவ இடங்களுக்கான ஒற்றைச் சாளர முறையிலான மாணவர் சேர்க்கையை ஒன்றிய அரசு தனதாக்கிக் கொள்ளும் எதேச்சாதிகாரப் போக்கை மேற்கொண்டிருக்கிறது. எல்லா வகையிலும் மாநில உரிமைகளையும், மருத்துவக் கட்டமைப்பையும் சிதைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஜனநாயக அறப்போர்க்களமாக சமூக சமத்துவ டாக்டர்கள் மாநாடு நடைபெறுகிறது.

இது உங்கள் போராட்டம் இல்லை, எங்கள் போராட்டம்! தமிழ்நாட்டின் போராட்டம்! மாநில உரிமைகளுக்கான போராட்டம்! அந்த உரிமைப் போராட்டத்தில் எப்போதும் துணைநிற்போம். நீட் தேர்வில் இருந்து முழுமையான விலக்கு, மருத்துவக் கல்வியில் மாநிலத்தின் உரிமை ஆகியவற்றோடு, கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இந்த உரிமைப் போரில் நாம் நிச்சயம் வெல்வோம்.

**இன்னும் 6 மாதத்தில் வெற்றிகரமான சிகிச்சையை இந்திய மக்கள் அளிப்பார்கள்!**

ஆபரேஷன் தியேட்டரில் அறுவை சிகிச்சையை முடித்து, நோயாளியின் இதயத் துடிப்பு உள்ளிட்டவை சீராக இருக்கிறதா என்று ஐ.சி.யூ வார்டில் கண்காணித்து, அதற்குப் பிறகு சாதாரண வார்டுக்கு மாற்றி, பின்னர் டிஸ்சார்ஜ் செய்வதற்கு எவ்வாறு உங்களுக்கு நேரம் தேவைப் படுகிறதோ – அதுபோல மருத்துவக் கட்டமைப்பையே நோயாளி ஆக்கியவர்களிடம் இருந்து மருத்துவத் துறையையும் நாட்டையும் மீட்டு ஆரோக்கியமாக்குவதற்கு அதிகபட்சமாக இன்னும் 6 மாதம் தேவையாக இருக்கிறது. வெற்றிகரமான சிகிச்சையை நிச்சயமாக இந்திய மக்கள் அளிப்பார்கள். உங்களின் அடுத்த மாநாடு வெற்றி மாநாடாக அமைய வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

# கழகம் வில்லாம்.. நின் அணியே கணையாம்!

## உங்களில் ஒருவன் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

பெற்றதும் அந்தத் தேர்தல்களத்தில் தான்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றியைத் தொடர்ந்து 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய முன்னணியின் ஆட்சி அமைந்தது. வி.பி.சிங் அவர்கள் பிரதமர் பொறுப்பினை ஏற்றார். அவரைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்த போது, என்னிடம் தன் அன்பைப் பொழிந்ததுடன், பேரணியை முன்னின்று நடத்தி வந்த பாங்கையும் பாராட்டி மகிழ்ந்தார். அதைவிட அவர் நமக்குத் தந்த பெருமகிழ்ச்சி என்பது, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு கிடைக்கச் செய்ததுதான்.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான சமூகநீதியை, இந்தியாவின் தவிர்க்க முடியாத அரசியல் கொள்கையாக மாற்றிக் காட்டியவர் வி.பி.சிங். அவருடைய இந்தச் சிறப்பான முடிவின் பின்னணியில் ஊக்கசக்தியாக விளங்கியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள்.

**சமூகநீதிக் காவலர் எனப் பெயர் பெற்ற வி.பி.சிங் ஆட்சியை, சமூக அநீதியை காலம் காலமாக ஆதரித்தும் நிலைநாட்டியும் வரும் பா.ஜ.க. கவிழ்த்தது. ஓராண்டு கூட முழுமையாகப் பதவியில் இல்லாவிட்டாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பிரதமர்களின் வரிசையிலே நிலையான இடத்தைப் பிடித்திருப்பவர் வி.பி.சிங் அவர்கள். அத்தகைய மாமனிதருக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.**

அன்று இளைஞரணிச் செயலாளரகவும் இன்று கழகத் தலைவராகவும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் உள்ள உங்களில் ஒருவனான நான் அதனைத் திறந்து வைக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றுள்ளதால்தான், "வாழ்வில் ஒரு பொன்னாள்" என்று இந்நன்னாளைக் குறிப்பிட்டேன்.

**ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் சமூகநீதிக்காகவும், மாநில உரிமைக்காகவும் தேசிய முன்னணி தொடங்கப்பட்டபோது, கழகத்தின் இளைஞரணி எத்தகைய எழுச்சிமிக்க பேரணியை நடத்திக் காட்டியதோ, அதுபோல, சமூகநீதியை முற்றிலுமாக அழிக்கத் துடிக்கும் 'நீட்' தேர்வுக்கு எதிராகவும், மாநில உரிமைகளைப் பறித்திடும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகவும் மக்களின் ஆதரவை நாடிக் கையெழுத்து இயக்கத்தையும், இரு சக்கர வாகனப் பரப்புரைப் பேரணியையும் மிகச் சிறப்பாக நடத்தியுள்ளது இன்றைய இளைஞரணி.**

முத்தாய்ப்பாக, டிசம்பர் 17ஆம் நாள் சேலத்தில் 'மாநில உரிமை மீட்பு முழக்க'த்துடன் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது. இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதி இன்று தன் பிறந்தநாளில் என்னிடம் வாழ்த்துகளைப் பெற்றுள்ளார். அவரை மட்டும் நான் வாழ்த்தவில்லை. இரண்டாவது மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என அயராது பாடுபடும் இருபத்தைந்து இலட்சம் இளைஞரணி உடன்பிறப்புகளையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

மாநாட்டை இளைஞரணி நடத்தினாலும் கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் இதில் பங்கேற்கும் உரிமையுண்டு. இந்த மாநாடு, இன்னும் சில மாதங்களில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பயிற்சிக் களம். கழகத்தினர் கூடுகின்ற பாசறைக் கூடம். அதனால்தான் நேற்று (நவம்பர் 26) நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தின் மையப் பொருளாக இளைஞரணி மாநாட்டிற்கான ஆயத்தப்பணிகள் குறித்தும், அதனை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு உங்களில் ஒருவனான என் தலைமையில் இளைஞரணி செயல்பட்டபோது, அதன் வெள்ளி விழா ஆண்டையொட்டி முதல் மாநில மாநாடு நடைபெற்றது. இப்போது தம்பி உதயநிதி அமைச்சராக இருப்பதுபோல அப்போது நான் அமைச்சர். இப்போது நான் முதலமைச்சராக இருப்பதுபோல, அப்போது தலைவர் கலைஞர் முதலமைச்சர். இளைஞரணி மாநாட்டுப் பணிகளை நான் முன்னின்று அப்போது மேற்கொண்ட போது, அதன் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்து, நெறிப்படுத்தி வழிநடத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதே பொறுப்புணர்வுடன்தான் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் என் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன்.

> **இளைஞரணி உருவாக்கப்படுவதற்கு முன்பு வரை தி.மு. கழகத்தின் மாநாடுகளையொட்டியும், சிறப்பு நிகழ்வுகளின் போதும் தொண்டர்கள் அணிவகுத்து வருவதற்கு 'ஊர்வலம்' என்றுதான் பெயர். இளைஞரணி உருவான பிறகே, ஊர்வலம் என்பது 'பேரணி' என்று பெயர் பெற்றது.**

கழகத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒவ்வொரு மாநாடும் வெற்றிக்கான விரைவுச்சாலை. அதில் கொள்கைப் பட்டாளம் வீறுநடைபோடும். மாநாடு தொடங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே உடன்பிறப்புகளிடம் எழுச்சி உருவாகிவிடும். மாநாடு முடிந்து ஆறு மாதங்கள் கடந்தாலும் உத்வேகம் குறையாத களப்பணி தொடரும். எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் நம் கொள்கையுணர்வு ஒருபோதும் குறைவதில்லை.

'அனைவருக்கும் அனைத்தும்' என்கிற திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பெண்களின் நலன் காக்கும் திட்டங்கள் நேரடிப் பயன்களைத் தருவதால் தமிழ்நாட்டுப் பெண்களின் நம்பிக்கைகுரிய இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே இருக்கிறது. அதுபோல இளைஞர்களுக்கான 'நான் முதல்வன்' திட்டம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, புதிய வேலைவாய்ப்புகள், மாவட்டந் தோறும் வேலை வாய்ப்பு முகாம்கள், விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஊக்கம் இவற்றை திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வருகிறது.

**பொய்களை விற்று அதில் கூலி பெற்று இளைஞர்களை ஏமாற்றும் கூட்டம் ஒரு புறம், வதந்திகளைப் பரப்பி வன்முறையை விதைத்து தமிழ்நாட்டில் கால் ஊன்றி விடலாம் எனத் தப்புக் கணக்குப் போடும் கூட்டம் மறுபுறம், தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டு தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைத்து விட்டுப் போன முதுகெலும்பற்ற கூட்டம் இன்னொரு புறம்; இந்த மோசடி அரசியல் சக்திகளை எதிர்கொண்டு, மக்கள் நலன் காக்கும் திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வரும் தி.மு.கழகமும் அதன் தோழமைச் சக்திகளும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளையும் முழுமையாக வென்றாக வேண்டும்.**

அப்போதுதான் இந்திய அளவில் நம் இந்தியா கூட்டணி வலுவான ஆட்சியை அமைக்கும். இளைஞரணி முன்னெடுத்துள்ள நீட் விலக்கு என்ற இலக்கினை வெற்றிகரமாக எட்ட முடியும். மாநில உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

இவற்றை மனதில்கொண்டு, இளைஞரணி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட மாவட்டக் கழகச் செயலாளர்கள் செயலாற்ற வேண்டும் என்பதை நேற்றைய கூட்டத்தில் எடுத்துரைத்தேன். தேர்தல் களத்திற்கான பயிற்சிக்களமாக அமையவிருக்கும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் வெற்றி, அதனைப் பறைசாற்ற வேண்டும்.

நெல்லையில் நடந்த இளைஞரணியின் முதலாவது மாநில மாநாட்டின் போது, புதிய ஆத்திசூடியை வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அதில், "கழகம் வில்லாம் நின் அணியே கணையாம்!" என்று எழுதியிருந்தார். **களத்தில் பாய்வதற்குத் தயாராக இருக்கும் கணைகளாக இளைஞரணியினர் செயலாற்றி வருகிறார்கள். அவர்களுக்குத் துணை நிற்கவும், இந்தியா திரும்பிப் பார்க்கும் வகையில் மகத்தான வெற்றி மாநாடாக அமையவும், மாநாட்டுத் தலைவர் தம்பி உதயநிதி அழைக்கிறார்.**

கழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அந்தந்த மாவட்டங்களுக்குட்பட்ட அனைத்துக் கிளைகளிலிருந்தும் தேர்தல் களத்திற்கான வீரர்களாக உடன்பிறப்புகள் திரளட்டும்! கடல் இல்லாச் சேலம், கருப்பு சிவப்புக் கடலினைக் காணட்டும்!

அன்புடன்
**மு.க.ஸ்டாலின்**
திருவள்ளுவர் ஆண்டு 2054
கார்த்திகை 11
27.11.2023

---

உச்சநீதிமன்ற வளாகத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு!

## நீதி - சமத்துவம் - மக்களாட்சி மாண்புகளின் அடையாளச் சின்னம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைத் தளப் பதிவு!

சென்னை, நவ. 27 -

உச்சநீதிமன்ற வளாகத்தில் அன்னை இந்தியாவின் சுவரோவியமும், அண்ணல் காந்தியின் சிலையும் மட்டுமே நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையில் உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதனைத் தொடர்ந்து தலைமை நீதிபதி சந்திரசூட்டின் முயற்சியின் பேரில், உச்சநீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அம்பேத்கரின் சிலை, வழக்கறிஞர் உடையில், 3 அடி, அடித்தளத்தில் 7 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையைச் சிற்பி நரேஷ் குமாவத் உருவாக்கியுள்ளார்.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமை நீதிபதி



டி.ஒய்.சந்திரசூட், ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் அம்பேத்கர் சிலை திறப்பு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**உச்சநீதிமன்ற வளாகத்தில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களது சிலை திறக்கப்படும் இந்தச் சிறப்புமிகு அரசமைப்புச் சட்டநாளில், நமது அரசமைப்புச் சட்டத்தின் நிலைத்த மதிநுட்பத்தைப் போற்றுவோம்!**

**அரசமைப்புச் சட்டத்தின் உயர்பண்புகளை நீதித்துறையில் காப்பதற்காக அயராது பாடுபடும் நீதியின் பாதுகாவலர்களுக்கு நமது நெஞ்சார்ந்த வணக்கத்தைச் செலுத்துவோம். அண்ணல் அம்பேத்கருக்குச் சிலை வடிவிலான புகழ்வணக்கம் என்பது வெறும் நினைவுகூர்தல் அல்ல, அது அவர் வகுத்தளித்த நீதி, சமத்துவம் மற்றும் மக்களாட்சி மாண்புகளின் மீது நாம் கொண்டுள்ள பற்றுறுதியின் அடையாளச் சின்னம் ஆகும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகவலைத் தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

சென்னையில் - இந்திய மேனாள் பிரதமர் - சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கிற்கு சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் வரலாற்றுக் கல்வெட்டு!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பாராட்டு!

சென்னை, நவ. 27-

இந்திய மேனாள் பிரதமர் - சமூக நீதிக் காவலர் வி.பி. சிங்கிற்கு சென்னையில் சிலை நிறுவுவது என்பது 15 ஆண்டு கால கனவு. அந்த கனவு சமூக நீதிக்கான சரித்திர நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் நிறைவேறுவது வரலாற்றுக் கல்வெட்டாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், உள்ளம் நிறைந்த பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக நீதிக்கான சரித்திர நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

சமூக நீதிக் காவலர்,



மேனாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் சிலை தமிழ்நாடு அரசின் சார்பில் தங்களால் திறக்கப்படும் அழைப்பிதழ் கிடைத்துப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் கிடப்பில் போடப்பட்டிருந்த மண்டல் குழுப் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்காகத் தொடர்ந்து போராடி வந்தோம். 42 மாநாடுகளையும், 16 போராட்டங்களையும் திராவிடர் கழகம் நடத்தியது.

தி.மு.க.வின் பங்களிப்பும் முக்கியமானது சிறப்பானது. வாராது வந்த மாமணியாக வந்துதித்த விஸ்வநாத் பிரதாப் சிங் (வி.பி.சிங்) அவர்கள் பிரதமராக வந்த போதுதான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அகில இந்திய அளவில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை செயல்படுத்தினார். அதன் காரணமாகவே பிரதமர் பதவியை இழந்தார்.

சமூகநீதிக்காக நூறு பிரதமர் நாற்காலிகளையும் இழக்கத் தயார் என்று நாடாளுமன்றத்திலே பிரகடனப்படுத்திய பெருமகன் அவர்.

சென்னையில் வி.பி.சிங் அவர்களுக்குப் பொருத்தமான நினைவுச் சின்னம் நிறுவப்படும் என்று திராவிடர் கழகம் ஏற்பாடு செய்த வி.பி.சிங் படத்திறப்பு விழாவில் (17.12.2008) முத்தமிழ் அறிஞர் மானமிகு கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

15 ஆண்டுகளுக்குப் பின் அந்தக் கனவு சமூகநீதிக்கான சரித்திர நாயகர் ஆட்சியில் நிறைவேறுவது வரலாற்றுக் கல்வெட்டாகும்.

உள்ளம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். விழா எல்லா வகையிலும் சிறக்க வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மை பிரிவு சார்பில் அமைச்சர் – இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஐந்து தையல் இயந்திரங்கள் ஐந்து இஸ்திரி பெட்டிகள் மற்றும் அசைவ உணவை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார். உடன் துணை மேயர் மு. மகேஷ் குமார், டாக்டர் சுபேர் கான், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, எஸ்.குணசேகரன், எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., கே.கே.நகர் கண்ணன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி, ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், கண்டிகை ஸ்டாலின், பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி, மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், மோகன் குமார், எம்.சி., வழக்கறிஞர் ஜெகதீசன், சசிகுமார், களக்காடி எல்லப்பன், தா.சம்பத், ஆர்.ரமேஷ், அட்கோ கமலநாதன், நா.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, எஸ்.ஆர். செந்தில், ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர்புரம் பிரகாஷ், கரி முல்லா, தமிழ் அன்சாரி, ரஹ்மத்துல்லா, கோயம்பேடு கலீம், வேளச்சேரி ஷேக், ஜெயபிரகாஷ், அன்பு ரோஸ், ஜான்சன், வசுமதி, ஜி.ஜே. மோசஸ், எம்.எஸ். ஷேக் ஆகியோர் உள்ளனர்.

---

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மயிலை 122 (அ) வட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

### மயிலை த.வேலு - நந்தனம் மதி -அ.நாகராஜன் பங்கேற்பு!

சென்னை, நவ.27

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 122-வது அ வட்டத்தின் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (27.11.2023 திங்கட்கிழமை) வட்டக்கழகம் முழுவதும் கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அதனை தொடர்ந்து மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.தினேஷ் ஏற்பாட்டில் ஆதிதிராவிடர் உண்டு உறைவிட பள்ளி மாணவர்களுக்கு அறுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு வருகை தந்து நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மயிலை மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் மதி மற்றும் வட்ட செயலாளர் அ. நாகராஜன் முன்னிலை யில் நடைபெறுகிறது.

இதில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அ.நாகராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---



தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் முகாம்* தற்போது நடைபெற்று வருகிறது. அனைத்து பள்ளிகளில் உள்ள வாக்கு சாவடி முகாம்களை தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தனது தொகுதியில் உள்ள வாக்கு சாவடி முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு வாக்கு சாவடி அதிகாரிகளிடமும் கழக பி எல் ஒ 2 , பகுதி , வட்ட நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். உடன் பகுதி கழக செயலாளர்கள் மண்டலத்தலைவர்கள் டி. காமராஜ், எஸ் .இந்திரன் மற்றும் கழகத் தோழர்கள், அதிகாரிகள் உள்ளனர்.

# அமலாக்கத்துறை கண்ணுக்கு பா.ஜ.க. தெரியாதா?





மணல் குவாரிகள் தொடர்பாக 10 ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி இருக்கிறது. இதற்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. "சட்டவிரோதப் பணப் பரிமாற்றம் எனும் அமலாக்கத்துறையின் அதிகார வரம்புக்குள் மணல் எடுப்பது வராது; ஆனால், அதிகார வரம்பை மீறி அமலாக்கத்துறை செயல்படுகிறது" என தமிழ்நாடு அரசு குற்றம்சாட்டியிருக்கிறது.

சம்மன் அனுப்புவது, வழக்கு போடுவது, சொத்துக்களை முடக்குவது, கைது செய்வது என அமலாக்கத் துறை ஒவ்வொரு வினாடியும் பா.ஜ.க. அல்லாத கட்சிகளை மட்டுமே குறி வைத்து நடவடிக்கை மேற்கொள்கிறது. மோடி அரசின் ஏவல் படையாக இருக்கும் அமலாக்கத் துறை 9 ஆண்டில் நடத்திய நடவடிக்கைகள் அனைத்தும் ஒன்றிய அரசின் எதிர்க் கட்சிகளை மட்டுமே குறி வைத்து நடத்தப்பட்டவை. அவற்றின் பட்டியல் தான் இது...

★2014 நாடாளுமன்றத் தேர்தலில் ஏப்ரல் 27ம் தேதி ஃபதேபூரில் பிரதமர் வேட்பாளரான மோடி பேசும் போது, "மன்மோகன் சிங்கின் பத்தாண்டு கால ஆட்சியில் சி.பி.ஐ., ஐ.பி, ரா, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை அமைப்புகளை எனக்கு எதிராகப் பயன்படுத்திய போதிலும் காங்கிரஸ்காரர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்றார். மோடி ஆட்சிக்கு வந்த பிறகு அந்த அதிகார அமைப்புகளை எதிர்க் கட்சிகள் மீதும் பா.ஜ.க. அல்லாத கட்சிகள் மீது ஏவியது. சி.பி.ஐ., ஐ.பி., ரா, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை, தேர்தல் கமிஷன் ஆகியவற்றை கையில் வைத்துக் கொண்டு தான் ஆட்சி கவிழ்ப்பு ஃபார்முலாவை அமல்படுத்தியது மோடி அரசு. மோடி ஆட்சிக்கு வந்த பிறகு 9 ஆண்டுகளில் மட்டும் அதிகார அமைப்புகளை வைத்து கொண்டு அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, கோவா, கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா மாநிலங்களின் ஆட்சிகள் கவிழ்க்கப் பட்டன. அங்கே தனது ஆதரவு வேட்பாளர்களை முதலமைச்சாராக்கி னார்கள். தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிசாமி ஆட்சியை ஆட்டி படைத்தார்கள்.

★"சி.ஏ.ஜி., சி.பி.ஐ, அமலாக்க துறை உட்பட அனைத்து தன்னிச்சையான, ஜனநாயகஅமைப்பு களையும் காங்கிரஸ் ஆட்சிதான் மட்டம்தட்டி அவமதித்தது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் தேவைப்பட்ட போதெல்லாம் கட்சிகளை மிரட்ட சி.பி.ஐயைப் பயன்படுத்தினீர்கள்" என்று பிரதமர் ஆவதற்கு முன்பு 2014 ஏப்ரல் 17ம் தேதி பேசிய மோடி, ஆட்சிக்கு வந்த பிறகு சி.பி.ஐ, ஆர்.பி.ஐ, சி.ஏ.ஜி, என்.ஐ.ஏ, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை, நிதி ஆயோக், தேர்தல் ஆணையம் போன்ற தன்னாட்சி அமைப்புகள் மோடியின் கட்டுப்பாட்டுக்குள் போனது. ரஃபேல் விமான முறைகேடு பற்றிப் பேசாத சி.ஏ.ஜி. அமைப்பை எல்லாம் யார் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள்?


டெல்லி மாநில துணை முதல்வர் மணிஷ் சிசோடியாவை அமலாக்கத் துறையினர் கைது செய்து அழைத்துச் சென்ற காட்சி!

★தவறு செய்தவர்கள் என்று பாஜகவினரால் குற்றம் சாட்டப் பட்டவர்கள், பா.ஜ.க.வில் இணைந்து விட்டால் மகாத்மா ஆகிவிடுவார்கள். அப்படிப்பட்ட 'புனிதர்கள்' மீதான வழக்குகள் புஸ்வானம் ஆகிவிடும். "கட்சியில் இணைந்தால் சி.பி.ஐ, அமலாக்கத்துறை வழக்குகளை முடித்து வைத்துவிடுகிறோம் என பா.ஜ.க பேரம் பேசியது. அவர்களிடம் தலைகுனிய மறுத்துவிட்டேன்" என்று ஆம் ஆத்மி கட்சியின் டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா சொன்னார். "நீங்கள் ஏன் பா.ஜ.க.வில் சேரக் கூடாது? என்று செந்தில் பாலாஜியிடம் அமலாக்கதுறை அதிகாரிகள் கேட்டனர்" என செந்தில் பாலாஜியின் வழக்கறிஞரே நீதிமன்றத்தில் சொன்னார். இதுதான் பா.ஜ.க.வின் யோக்கியதை ஆகும்.

★மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸில் எம்.பி., அமைச்சர் எனப் பொறுப்புகளை வகித்து, முதல்வர் மம்தாவின் தளபதியாக இருந்த சுவேந்து அதிகாரி, அஸ்ஸாம் காங்கிரஸ் கட்சியின் அமைச்சரான ஹிமந்தா பிஸ்வா சர்மா, மகாராஷ்டிரா முன்னாள்முதல்வர் நாராயண் ராணே, மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார், சிவசேனா கட்சியின் எம்.பி பாவனா கவாலி, சிவசேனா எம்.எல்.ஏ பிரதாப்சர்நாயக், சிவசேனா பிரமுகர் யஷ்வந்த் ஜாதவ் ஆகியோர் மீதான வழக்குகள் பா.ஜ.க வில் சேர்ந்த பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. மேல் நடவடிக்கை இல்லாமல் முடக்கப்பட்டு விட்டன.

★பா.ஜ.க.வுக்கு எதிரான 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் கூட்டம் பட்னாவில் நடந்து, அது தொடர்பான புகைப்படம் வெளியானது. உடனே பிரதமர் மோடி, மத்தியப் பிரதேசம் போபாலில் 2023 ஜூன் 27ம் தேதி பேசும் போது, "பா.ஜ.க வுக்கு எதிராக பாட்னாவில் சில எதிர்க் கட்சிகள் கைகோர்த்து போட்டோவுக்கு போஸ் கொடுத்துள்ளனர். அந்த போட்டோவில் உள்ள அனைவரையும் சேர்த்தால் 20 லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்திருப்பார்கள். தேசியவாத காங்கிரஸ் கட்சியை எடுத்துக் கொண்டால் அதன் மீது 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் புகார் உள்ளது. மகாராஷ்டிரா மாநில கூட்டுறவு வங்கி ஊழல், மகாராஷ்டிரா பாசனத் திட்ட ஊழல், சட்ட விரோத சுரங்க ஊழல் இந்த பட்டியலும் நீண்டு கொண்டே போகும்" என்றார். மோடி இப்படிப் பேசிய அடுத்த 5வது நாளில் அதாவது 2023 ஜூலை 2ம் தேதி ஒரு அதிசயம் நடந்தது.

தேசியவாத காங்கிரஸ் கட்சி பிளக்கப்பட்டு 30 எம்.எல்.ஏக்கள் மஹாராஷ்டிராவில் ஆளும் பா.ஜ.க. சிவ சேனா ஆட்சிக்கு ஆதரவு அளித்தனர். தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் அஜித் பவார் துணை முதல்வர் ஆனார். அவருடன் தேசியவாத காங்கிரஸின் 8 பேர் அமைச்சர்க ளாகப் பதவியேற்றனர். எந்த தேசிவாத காங்கிரஸ் கட்சி மீது 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் புகார் உள்ளது என மோடி சொன்னாரோ அந்த கட்சியின் எம்.எல்.ஏகளை வளைத்துதான் ஆட்சியை அமைத்தார்கள். இப்போது அவர்கள் மீதான வழக்குகள் புனிதத்துவம் பெற்றது.

★ 'நியூஸ் கிளிக்' நிறுவனத்தின் அலுவலகங்களில் அமலாக்கத்துறையினர் 2021 செப்டம்பரில் சோதனை நடத்தினர். விவசாயிகள் போராட்டம் பற்றிய செய்திகளை 'நியூஸ் கிளிக்' கவரேஜ் செய்த வீடியோக்கள் மில்லியன் கணக்கானவர்கள் பார்த்ததுதான் ரெய்டுக்குக் காரணம்.

★சிவசேனா கட்சியின் மூத்த தலைவரும் உத்தவ் தாக்கரேவின் தீவிர ஆதரவாளரான சஞ்சய் ராவத்எம்.பிக்கு எதிராக குடிசை சீரமைப்பு திட்டத்தில் பண மோசடி என சொல்லி அமலாக்கத்துறை பழிவாங்கியது.

★தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவின் மகள் கவிதா மதுபானக் கொள்கை ஊழல் வழக்கில் குறி வைக்கப்பட்டார்.

★ரயில்வே வேலைக்கு லஞ்சம் என சொல்லி லாலு பிரசாத் யாதவ் குடும்பத்தி னருக்கு சொந்தமான 6 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக் களை அமலாக்கத்துறை முடக்கியது.

★சத்தீஸ்கர் சட்டசபைத் தேர்தலை நெருங்கி கொண்டிருந்த நேரத்தில் அங்கே ஆளும் காங்கிரஸ் ஆட்சியின் மீது கரும்புள்ளியை குத்த சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகலின் அரசியல் ஆலோசகர் வீடு உள்பட அவருக்கு நெருக்கமானவர்களின் இடங்களில் அமலாக்கத்துறை சோதனை போட்டது.

★மதுபான கொள்கை வழக்கில் டெல்லி துணை முதல்வராக இருந்த மணிஷ் சிசோடியா ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில் ஆம் ஆத்மி ராஜ்யசபா எம்.பி. சஞ்சய் சிங்கின் வீட்டில் சோதனை நடத்திய அமலாக்கத்துறை அவரை கைது செய்தது.

★ராஜஸ்தான் சட்டசபை தேர்தல் பரபரப்புக்கு நடுவே அமலாக்கத்துறை 25 இடங்களில் அதிரடி சோதனை நடத்தி காங்கிரஸ் முதல்வர் அசோக் கெலாட் அரசை ஊழல் அரசாக சித்தரிக்க முயன்றார்கள்.


தெலங்கானா முதல்வர் சந்திரசேகர் மகள் கவிதா அமலாக்கத்துறை முன் ஆஜராக சென்றபோது எடுத்தப் படம்.

சொன்னது கொஞ்சம் தான். அமலாக்கத் துறையை வைத்து பா.ஜ.க.அரசு செய்து வரும் அடாவடிகள் ஏராளம். அந்த அமலாக்கத் துறை பா.ஜ.க.வின் கொள்கையை அமலாக்கம் செய்யும் துறையாகவே மாறிபோனது. அம லாக்கத்துறை இயக்குநரான சஞ்சய் மிஸ்ராவின் பதவி காலம் முடிந்த பிறகும் அவருக்கு 3 முறை மோடி அரசு பணி நீட்டிப்பு வழங்கியது. 3வது முறையாக சஞ்சய் மிஸ்ராவுக்கு பதவி நீட்டிப்பு வழங்கப்பட்ட போது அந்த நடவடிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டன. அதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் "அமலாக்கத்துறை இயக்குநர் மிஸ்ராவின் பதவி நீட்டிப்பு சட்டவிரோதமானது. அம லாக்கத்துறை இயக்குநர் பதவியில் ஜூலை 31ந் தேதி வரை மட்டும்தான் மிஸ்ரா பதவியில் இருக்க வேண்டும். அதற்கு பின் அந்தப் பதவியில் அவர் நீடிக்கக் கூடாது" என அதிரடியாக உத்தரவிட்டது. அதன் பிறகும் கூட ஒன்றிய அரசு மீண்டும் உச்சநீதிமன்றத்தை அணுகி மிஸ்ராவின் பதவி நீட்டிப்புகாக மன்றாடியது. அப்போது செப்டம்பர் 15க்குப் பின்னர் மிஸ்ரா எந்த நிலையிலும் அமலாக்கத்துறை இயக்குநராக நீடிக்கவே கூடாது" என உச்ச நீதிமன்றம் சொன்னது. அமலாக்கத் துறையில் அரசியல் தலையீடு இருப்பது உச்ச நீதிமன்றம் வரை நாறடித்தது.

ராஜஸ்தான் மாநிலத்தில் ஏலச்சீட்டு மோசடி வழக்கில் 15 லட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டதாக அமலாக்கத்துறை அதிகாரிகளை அந்த மாநில லஞ்ச ஒழிப்பு போலீஸே அதிரடியாக கைது செய்த சம்பவம் எல்லாம் அமலாக்கத் துறையின் முகமுடியை கிழித்தெறிந்தது.

அதானியின் ஷெல் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய் யாருக்குச் சொந்தமானது? அந்தப் பணம் எங்கிருந்து வந்தது? என அமலாக்கத் துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அதானி ஹிண்டன்பர்க் விவகாரத்தில் விசாரணை நடத்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவை ஏன் அமைக்க வில்லை? கர்நாடகாவில், 'எடியூரப்பா, பசவராஜ் பொம்மை ஆட்சியில் 40 சதவீத கமிஷன் அரசு' என குற்றச்சாட்டு எழுந்த போது சட்டவிரோத பணப் பரிமாற்றம் என சொல்லி மோடியின் அமலாக்கத் துறை ஏன் நடவடிகை மேற்கொள்ளவில்லை? ராஜஸ்தானில் சஞ்சிவாணி கூட்டுறவு ஊழல், மத்தியப் பிரதேசத்தில் போஷன் ஊழல், சத்தீஸ்கரில் நான் (NAAN) ஊழலில் ஈடுபட்டவர்கள் யார்? என்பது மோடிக்குத் தெரியாதா? சத்தீஸ்கர், ராஜஸ்தான் மாநிலங்களில் பா.ஜ.கதலை வர்கள் மீது எழுப்பப்பட்ட ஊழல் புகார்கள் பற்றி வாய் திறக்காதது ஏன்? எதிர்க் கட்சித் தலைவர்கள் மீது அமலாக்கத் துறை, சி.பி.ஐ விசாரணை எனத்தீவிரம் காட்டிய மோடி அரசு, பா.ஜ.க தலைவர்கள் மீது ஏன் பாய்ச்சலை காட்டவில்லை. அவர்கள் சலவை எந்திரத்தால் தூய்மை செய்யப்பட்டவர்களா?

**–திராவிடத்தீரன்**

---

### திருவொற்றியூரில் கழக மீனவர் அணி சார்பில்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா! 3 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு!

### தலைமை:கே.பி.சங்கர்! மாதவரம் எஸ்.சுதர்சனம் - கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

*திருவொற்றியூர், நவ.27 -*

*திருவொற்றியூரில் கழக மாநில மீனவர் அணி சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில மீனவரணி துணைத் தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் மூன்றாயிரம் நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (27.11.2023) நடைபெறுகிறது.*

*இதில் சென்னை வடகிழக்கு மாவட்டக் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர், கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*மாநில மீனவர் அணி சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகள்.*

*இன்று (27.11.2023) காலை 8.00 மணியளவில் கே.வி.கே.குப்பத்தில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்குகிறார்.*

*காலை 11.00 மணி அளவில் விம்கோ நகர் மெட்ரோ பேருந்து நிலையம் அருகில் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில் ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை அசைவ உணவு வழங்குகிறார்.*

*நண்பகல் 12.00 மணி அளவில் தியாகி சத்திய மூர்த்தி நகரில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக பிரதிநிதியும், தியாகி சத்திய மூர்த்தி நகர் தலைவருமான எஸ்.மகேந்திரன் முன்னிலையில் 1000 நபர்களுக்கு அறுசுவ அசைவ உணவு வழங்குகிறார்.*

*நண்பகல் 12.30 மணியளவில் கே.வி.கே.குப்பத்தில் உள்ள திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி அலுவலகம் அருகில் உள்ள தியாகச் சுடர் கே.பரசுராமன் நினைவு கலையரங்கம் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன் முன்னிலையில் அசைவ உணவு வழங்குகிறார்.*

*இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி மாணவர் அணி மீனவர் அணி மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மின்கழக தொ.மு.ச, ஆட்டோ தொ.மு.ச, உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் அன்பு உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்கின்றனர்.*


கத்தார் நாடு சென்றிருந்த, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனியை, கத்தார் நாட்டு தி.மு.க. அயலக அணியின் பொறுப்பாளர் நா.சதுக்கத்துல்லா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழர்கள் சந்தித்து வரவேற்று – கத்தார் நாட்டில் பயிலும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு தமிழ் பாடப் புத்தகங்கள் கிடைக்கப்பெறாமல் தட்டுப்பாடு நிலவுவதை மனு வாயிலாக எடுத்துரைத்து விளக்கினர். அக் கோரிக்கையினை ஏற்று விரைவில் அதற்குத் தீர்வு காணுவதாக திண்டுக்கல் ஐ.லியோனி, உறுதியளித்தார்.

---

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## திருவல்லிக்கேணி -119வது வட்டத்தில் கழகக் கொடியேற்றல்!

### வட்டச் செயலாளர் க.வே.மோகன் வேண்டுகோள்!

*சென்னை, நவ.27*

*திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டத்தின் சார்பாக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி.,ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி., திருமதி கமலா செழியன் எம்.சி., ஆகியோர் தலைமையில் வட்ட செயலாளர் க.வே. மோகன் ஏற்பாட்டில் இன்று ( 27.11.2023) காலை 8 மணியளவில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட்டம் முழுவதும் கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்படுகிறது.*

இதில் வீ.பி.பொன்னரசு, ஆர்.என்.துரை, டாக்டர் சுபேர்கான், வி.என்.ராஜன், ரவிராஜ்குமார், தயாநிதி, கே. திருநாவுக்கரசு, பி.பத்மாவதி, ஆர்.ரஞ்சித்குமார், எல்.பாலு, எஸ்.ரவிச்சந்திரன், க.பாலாஜி மற்றும் வட்ட நிர்வாகிகள் முனுசாமி, லூர்து மகேஸ்வரி, ஆர்.கோபு, டி.ஜெயக்குமார், பி.ஏழுமலை, பாலசுப்பிரமணி, கே.தினேஷ், இ.மாரி, டி.சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்க, இதில் கழக முன்னோடிகள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி மற்றும் அனைத்து அணியினர் பங்கேற்கின்றனர்.

எம்.ராஜேஷ், எம்.கதிர், இ.குமரன், எஸ்.சதிஷ்குமார், எச்.நந்தகுமார், பி.மணிகண்டன், உதயகணேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.


திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் வார்டு 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 14அ ஆகிய வட்டங்களில் நேற்று (26.11.2023 ) நடைபெற்ற வாக்காளர் சரி பார்த்தல் சிறப்பு முகாமில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பாக முகவர்கள், பாகநிலை முகவர்கள் BLA 2 & BLC கலந்து கொண்டு புதிய வாக்காளர் சேர்த்தல், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்தல் போன்ற பணிகளை திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆய்வு மேற்கொண்டார். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



வேலூர் பேபி மஹாலில் நேற்று முன்தினம் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் சிறப்பு மலரை கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர். காந்தி, குழு உறுப்பினர்கள் மற்றும் நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் திருமதி.மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார். ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், அ.செ. வில்வநாதன், ஜே.எல். ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு. மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திரையுலகம், அரசியல் உலகில்

# கலைஞர் தொட்ட சிகரத்தை யாரும் தொட முடியாது!

## வேலூரில் கலைஞர் நூற்றாண்டு விழாவில் அமைச்சர் துரைமுருகன் பெருமிதம்!

வேலூர், நவ.27-

“திரையுலகம், அரசியல் உலகில் கலைஞர் தொட்ட சிகரத்தை யாராலும் தொட முடியாது” என கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வரும் நிலையில் நீர்வளத்துறை சார்பில் வேலூரில் ‘பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர்’ என்ற தலைப்பில் நேற்று முன்தினம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, வேலூர் நகர அரங்கில் புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து, தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ‘பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் நூற்றாண்டு விழா” சிறப்பு மலர் மற்றும் குறும் படத்தை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது, ‘கலைஞரும் திருவண்ணாமலையில் உள்ள அருணாச்சலேஸ்வரரும் ஒன்று தான். ஏனென்றால், அருணாச்சலேஸ்வரர் அடி, முடி காண முடியாதவர். அதுபோலத் தான் கலைஞரும். அவர் தொட்ட சிகரத்தை யாரும் தொட்டது கிடையாது.



திரைப்பட உலகில் பராசக்தி, மனோகரா படங்களின் வசனம் போல் கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகும் யாராலும் வேறு ஒரு வசனத்தையும் எழுத முடியவில்லை. புதிதாக நடிக்க வருபவர்களை பராசக்தி வசனத்தை பேசச் சொல்லித்தான் தேர்வு வைக்கின்றனர்.

அதேபோல், அரசியல் உலகில் சுதந்திர தினம், குடியரசு தின விழாவுக்கு ஆளுநர் தேசிய கொடியேற்றிய நிலையில் சுதந்திர தினத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்கள் தேசிய கொடியை ஏற்ற வேண்டும் என இந்திரா காந்தியிடம் கேட்டவர் கலைஞர்.

அதன் விளைவு சுதந்திர தின விழாவில் முதல்வர்கள் தேசிய கொடி ஏற்றலாம் என்ற உரிமையை வாங்கிக்கொடுத்தவர் கலைஞர். வங்கிகளை தேசிய மயமாக்க இந்திரா காந்திக்கே யோசனை கொடுத்தது கலைஞர் தான். திருவள்ளுவருக்கு வானுயர்ந்த சிலை, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து, மெட்ராஸ் என்பதை சென்னை என்று மாற்றி அவர் செய்ததை யாரும் தொட முடியாது. அவரது எழுத்து, பேச்சு, நிர்வாகத்தை யாரும் தொட முடியாது.

பேரறிஞர் அண்ணா மீது அபரிமிதமான பற்றுக்கொண்டவர். தினசரி 500 முறையாவது அறிஞர் அண்ணாவின் பெயரை கூறி விடுவார். ஒரு தொண்டன், தலைவராய் எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டாய் இருந்தவர் கலைஞர். அதை நிரூபித்தும் காட்டினார். எதையும் சாதிக்கும் குணம் கலைஞருக்கு உண்டு”.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

இதில், நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் சந்தீப் சக்ஸேனா, வேலூர் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், எம்.எல்.ஏ.க்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமலு விஜயன், வில்வநாதன், ஈஸ்வரப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நூற்றாண்டு விழாவில் திருச்சி கலைக்காவேரி கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி.சிறப்புரையாற்றி வாழ்த்திப் பேசினார்.

தொடர்ந்து, மாலை 6 மணியளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம் இலக்கியப் பணியா? சமுதாயப் பணியா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. நகைச் சுவை நாவலர் புலவர் மா.ராமலிங்கம் நடுவராகவும், இலக்கியப் பணியே என்ற தலைப்பில் குறிஞ்சிப்பாடி முனைவர் இரா. நவஜோதி, பட்டுக் கோட்டை முனைவர் பி.பாஸ்கர், திருச்சி அன்னலட்சுமி ஆகியோர் பேசினர். சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சேலம் அபு, மணப்பாறை கவிஞர் லலிதா, திருத்தணி வேதநாயகி ஆகியோர் பேசினர்.



மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி. பி. சிங் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வருகை புரிந்த உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களை நேற்று (26.11.2023) சென்னை விமான நிலையத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், ஆகியோர் வரவேற்றனர்.

### எஸ்.மதன்மோகன் தலைமை! கே.மகேஷ் வரவேற்புரை! சேப்பாக்கம் 62(அ) வட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம் - அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

## தயாநிதி மாறன் எம்.பி. -மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை,நவ,27,

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி, 62(அ) வட்ட தி.மு.க.சார்பில், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (28.11.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை, கலவைத் தெரு, சாமி பண்டாரம் தெரு சந்திப்பு சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் தலைமை வகிக்கிறார். வட்டச் செயலாளர் கே.மகேஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். வட்டச் செயலாளர் ஆர். ஜெகதீசன், எம்.ராஜகாந்தம், எஸ்.சுரேஷ்குமார், பி. ராஜேஷ், மிக்ஸி கே.அலீப், மல்லிகாபீ, பி.பாலசந்தர், எம்.நந்தகுமார், ஆர்.சிவராஜ், எப்.நசீர், ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.கார்த்திக், யு.பாஷா, ஆர்.ரங்கநாதன், ஏ.அன்வர்பாஷா, பி.எஸ். சத்தீஷ், எஸ்.சங்கர், கே.டி. ராமலிங்கம், டிங்கர் பாஸ்கர், என்.எஸ்.பாஸ்கரன், பி.பரமசிவம், வி.நடராஜ், எச்.ஸ்ரீகாந்த், வேளாங்கன்னி, சாந்தி, வசந்தா, ஆனந்தி, லட்சுமி பாய், சுந்தரிபாய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந் நிகழ்ச்சியில் நல உதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை யாற்றுகிறார்.

மேலும் இதில் தயாநிதி மாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், எம்.சி.பி.இளையராஜா, எஸ்.கே.ராஜ், பா.சிதம்பரம், எஸ்.எச்.ரகமதுல்லா, ஜி.ராஜராஜன், ரங்கராஜன், ஜெ.விஜய், வெ.தமிழன்பன், வழக்கறிஞர் எஸ். சுகேந்திரன், ஜி. ஜெ.கிரிதரன், என்.சுரேஷ், பி.சலாவுதீன், பி.எஸ்.ஸ்ரீதர், என். குமரன், ஜி. வி. பாலாஜி, சி.சாய்குமார், சி. சாது, வி.கதிரவன், ஆர்.எஸ். சந்திரகுமார், ராமச்சந்திரனௌ, சிவா, வெங்கடேசன், காளி, சக்திவேல், ராஜ்குமார், எஸ்.எஸ்.கண்ணன், ஐ.ஜஹாங்கீர், எம்.சுமதி, என். செல்வம், துலசை அமான் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். எம். நிஜாம், பி.அமுதா, கே.முருகேசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.






கலைஞர் 100
1924 - 2023
நவம்பர் 27-இல்
பிறந்தநாள்
காணும்
RAM DESIGNS ©9884593766
தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களின்
வெற்றிக் கோப்பையே!
தி.மு.க விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்
தயாநிதி மாறன் எம்.பி
மாநிலத் துணைச் செயலாளர்கள்
டாக்டர். பொன்.கௌதமசிகாமணி எம்.பி எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி
பைந்தமிழ் பாரி வே.நம்பி எஸ்.கார்த்திக் ஆர்.கோபால்ராம் நிவேதா ஜெசிகா
சுரேஷ் ஜே.மனோகரன் மு.வாசிம்ராஜா வே.கௌதமன்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி


நவம்பர் 27 அன்று பிறந்தநாள் காணும்
தமிழ்நாட்டின் உரிமைகள் மீட்க வந்த கழகப் போராளியே!
வாழ்த்துகிறோம்...
ARASU ARTS
அன்புடன்
தி.மு.க இளைஞர் அணி துணைச் செயலாளர்கள்
எஸ்.ஜோயல் ❖ ந.ரகுபதி (எ) இன்பா ஏ.என்.ரகு ❖ நா.இளையராஜா
ப.அப்துல் மாலிக் ❖ கே.இ.பிரகாஷ் ❖ பிரபு கஜேந்திரன்
பி.எஸ்.சீனிவாசன் ❖ ஜி.பி.ராஜா ❖ சி.ஆனந்த் குமார்


உரிமைக்கு குரல் கொடுக்கும்
எங்களின் உதயமே!
இளைஞர்களை வழிநடத்தும்
இளையத் தலைவரே!
வரலாற்று இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வாழ்க.. பல்லாண்டு என
வாழ்த்தி மகிழ்கிறோம்...
நவம்பர் 27
கடமையின்
உதயநாள்
மாண்புமிகு
எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்
வாழ்த்தி மகிழும்...
கோ.ஐயப்பன் M.A., M.L.A.
கடலூர் சட்டமன்ற உறுப்பினர்
Dr.பிரவின் ஐயப்பன் M.S., (Ortho)







கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள குறிஞ்சி இல்ல முகாம் அலுவலகத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி,மாணவர் அணி,மருத்துவர் அணி சார்பில், பொதுமக்கள், கல்லூரி மாணவர்களிடம் நீட் தடையின் அவசியத்தை கொண்டு செல்லும் வகையில் நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கம்* தொடங்கப்பட்டு, திருவள்ளூர் மத்திய மாவட்டம் சார்பாக, ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகளில் நீட் விலக்கிற்கு ஆதரவாக இணையதளம் மற்றும் தபால் அட்டை வாயிலாக மொத்தம் 1,45,674 கையெழுத்துகள் தற்போதுவரை பெறப்பட்டு முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. ஒப்படைத்தார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார், ஆவடி மாநகர அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் உள்ளனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ. 27

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நவம்பர் 27 எளியோர்களின் எழுச்சிநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவீர் என மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி இன்று (27.11.2023 திங்கள்கிழமை) காலை 10:00 மணி முதல் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நவம்பர் 27 எளியோர்களின் எழுச்சிநாள், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு செயலாக்க திட்டம் அமைச்சர், இளஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு செயலாக்க திட்டம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி கீழ்கண்டவாறு மாவட்ட கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

அதுசமயம் கீழ்கண்ட இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை சம்மந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் வார்டு கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாடு செய்திடவும் மேலும் இந்நிகழ்ச்சிகளில் கடலூர் மேற்கு மாவட்டை சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்டம், வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.






## கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் : சென்னை மேற்கு மாவட்டத்தில் நல உதவிகள் வழங்கல்!



## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட முழுவதும் தொடர் நிகழ்ச்சிகள் – நல உதவிகள் வழங்கப்படுகின்றன.

சென்னை மேற்கு மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் குறித்து மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை.

சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் ஆகிய தொகுதிகளில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கீழ்க்கண்ட பகுதிகளில் வட்டம் வாரியாக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

அதன் விவரம் பின்வருமாறு

### சேப்பாக்கம் பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலதிட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 62 | 27.11.2023 | 1.ஐயா முதலி தெரு சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | ஜெகதீசன் |
| | | 2.பஜார் தெரு | | |
| | | 3.காக்ஸ் காலனி | | |
| | | 4.ரெக்ஸ் தெரு பாலகிருஷ்ணன் பிள்ளை தெரு சந்திப்பு | மாணவர்களுக்கு நோட்டு,புத்தகம், பென்சில் வழங்குதல் | |
| | | 5. முக்கியம்மன் கோவில் தெரு லாசர் தெரு சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | 6. நாவலர் நெடுஞ்செழியன் நகர் | | |
| | | 7. பம்பிங் ஸ்டேஷன் சாலை | | |
| | | 8. சாமி நாயக்கன் தெரு | | |
| 62அ | 27.11.2023 | 1. சிங்கன்ன தெரு குருவப்ப தெரு சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | மகேஷ் |
| | | 2. அய்யா தெரு குருவப்பா தெரு சந்திப்பு | | |
| | | 3.கலவைத் தெரு சாமி பண்டாரம் தெரு சந்திப்பு | | |
| | | 4.சாமி நாயக்கன் தெரு டாம்ஸ் ரோடு சந்திப்பு | | |
| | | 5.மேற்கு கூவமாறு சாலை | | |
| | | 6.சாமி நாயக்கன் தெரு குருவப்பா தெரு சந்திப்பு | மாணவர்களுக்கு நோட்டு,புத்தகம், பென்சில் வழங்குதல் | |
| | | 7.தர்மராஜா கோயில் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| 63 | 27.11.2023 | 1.நாராயண நாயக்கன் தெரு ஆதித்தனார் சாலை சந்திப்பில் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | பிரபாகரன் |
| | | 2.காஞ்சிபுரம் பச்சையப்பான் தெரு சந்திப்பு | | |
| 63அ | 27.11.2023 | 1.ரோமெக்ஸ் ஹோட்டல் அருகில் | | சின்ராஜ் |
| | | 2.எல்.ஜி.என் சாலை | | |
| | | 3.வீரன்புரம் சந்திப்பு | | |
| | | 4.சுபைதார் உசேன் சாலை(எம்.எஸ்.மஹால்) அருகில் | உணவு வழங்குதல் | |
| 114 | 27.11.2023 | 1.திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை (தலைவர் சிலை)அருகில் | மாணவர்களுக்கு நோட்டு,புத்தகம், பென்சில் வழங்குதல் | வெங்கடேசன் |
| | | 2.மேயர் சிட்டிபாபு தெரு | உணவு வழங்குதல் | |
| 114அ | 27.11.2023 | 1. C.N.Kசாலை | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | தமீம் அன்சாரி |
| | | 2.லாக் நகர் | | |
| 115 | 27.11.2023 | 1.ஆல்தோட்டம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | வெங்கடேசன் |
| | | 2. பெருமாள் முதலி தெரு | | |
| | | 3. ஜானி ஜான் கான் ரோடு | | |
| | | 4.நாயர் வரத பிள்ளை தெரு | மாணவர்களுக்கு நோட்டு,புத்தகம், பென்சில் வழங்குதல் | |

### திருவல்லிக்கேணி பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 115 (அ) | 27–11–2023 | தேவராஜ் தெரு | நலத்திட்ட உதவிகள் | கே.ஜி. செந்தில்குமார் 115 (அ) வட்டச் செயலாளர் |
| 116 | 27–11–2023 | அயோத்தி நகர் | நலத்திட்ட உதவிகள் | எஸ். சசிகுமார் 116 வட்ட செலாளர் |
| 116 அ | 27–11–2023 | பி.வி.நாயக்கன் தெரு | நலத்திட்ட உதவிகள் | ஜெ.விஜயகுமார் 116 அ வட்ட செலாளர் |
| 119 | 27–11–2023 | வி.எம்.தெரு, அஜந்த ஹோட்டல் அண்ணா சாலை அருகில் | நலத்திட்ட உதவிகள் | கா.வே.மோகன் 119 வட்ட செலாளர் |
| 119 அ | 27–11–2023 | வாயிட்ஸ் ரோடு | நலத்திட்ட உதவிகள் | கே.பிரபு 119 அ வட்ட செலாளர் |
| 120 | 27–11–2023 | முத்தையா தெரு | நலத்திட்ட உதவிகள் | ஐ.சி.எப்.சங்கர் 120 வட்ட செலாளர் |
| 120 அ | 27–11–2023 | வி.ஆர்.பிள்ளை தெரு | நலத்திட்ட உதவிகள் | என்.ரவி 120 அ வட்ட செலாளர் |
| 120 அ | 27–11–2023 | கஜபதி லாலா தெரு | நலத்திட்ட உதவிகள் | ஆர். ராஜ்குமார் மாவட்ட பிரதிநிதி |
| 120 | 02–12–2023 | சுந்திரா நகர் | நலத்திட்ட உதவிகள் | ஐ.சி.எப். சங்கர் 120 வட்ட செயலாளர் |
| 116 அ | 03–12–2023 | டி.பி.கோயில் தெரு | வேஷ்டி, சட்டை, புடவை | ஜெ.விஜயகுமார் 116 அ வட்ட செயலாளர் |
| 116 | 03–12–2023 | வி.ஆர்.பிள்ளை தெரு | நலத்திட்ட உதவிகள் (ம) அறுசுவை உணவுகள் | எஸ்.சசிகுமார் 116 வட்ட செயலாளர் |
| 119 | 10–12–2023 | பூரம் பிரகாம் தெரு | நலத்திட்ட உதவிகள் (ம) அறுசுவை உணவுகள் | கா.வே.மோகன் 119 வட்ட செயலாளர் |
| 120 அ | 10–12–2023 | இருசப்ப தெரு | நலத்திட்ட உதவிகள் (ம) அறுசுவை உணவுகள் | என்.ரவி 120 அ வட்ட செயலாளர் |
| 119 அ | 17–12–2023 | வி.எம்.தெரு | நலத்திட்ட உதவிகள் | கே.பிரபு 119 அ வட்ட செயலாளர் |
| 115 அ | 17–12–2023 | ஷேக்தாவுத் தெரு | நலத்திட்ட உதவிகள் | கே.ஜி.செந்தில்குமார் 115 அ வட்ட செயலாளர் |
| 120 அ | 17–12–2023 | முனுசாமி நகர் | நலத்திட்ட உதவிகள் | இ.இளம்பாரதி மாவட்ட அமைப்பாளர் ஆதிதிராவிடர் நலக்குழு |
| 116 | 17–12–2023 | அயோத்தி நகர் | நலத்திட்ட உதவிகள் | எம்.கே.ஆனந்த் மாவட்ட அமைப்பாளர் மீனவர் அணி |
| 116 | 17–12–2023 | மாட்டான்குப்பம் | நலத்திட்ட உதவிகள் | ஏ.விக்னேஷ்வரன் பகுதி அமைப்பாளர் மாணவர் அணி |

### ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 109 | | மேற்கு நமச்சிவாயபுரம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | கா.சிட்டிபாபு 109 வட்ட செயலாளர் |
| | | கிழக்கு நமச்சிவாயபுரம் | | |
| | | வட அகரம் முதல் தெரு | | |
| | | திரு வேங்கடபுரம் 2 வது தெரு | | |
| | | திருவள்ளூர் புரம் | | |
| | | அபித் நகர் | | |
| | | டாக்டர் ராதா கிருஷ்ணன் நகர் | | |
| | | பாஷா தெரு | | |
| 109 அ | | அண்ணா சாலை சந்திப்பு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | எஸ்.டேவிட் இன்பராஜ் 109 அ வட்ட செயலாளர் |
| | | தெற்கு கங்கையம்மன் தெரு சந்திப்பு | | |
| | | பஜனை கோயில் 4 வது தெரு | | |
| | | ஸ்ரீராம் புரம் தெரு | | |
| | | வன்னியர் தெரு | | |
| 110 | | ஸ்டெர்லிங் ரோடு கிளை கழகம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | கே.எஸ்.தினேஷ் பிரபு 110 வட்ட செயலாளர் |
| | | அவென்யூ ரோடு | | |
| | | புள்ளாங்கி புரம் | | |
| | | வள்ளுவர் கோட்டம் | | |
| | | ஜெயலட்சுமி புரம் | | |
| | | ஜெயலட்சுமி புரம் பிரதான சாலை | | |
| | | கேவி.கே. நினைவு மன்றம் | | |
| | | சொக்கப்பன் சாலை | | |
| | | அப்பாசாமி தெரு 6 வது அவென்யூ | | |
| | | அப்பாசாமி தெரு 7 வது அவென்யூ | | |
| | | அப்பாசாமி தெரு ஆற்றோர பகுதி | | |
| | | ஆரிங்டன் சாலை | | |
| 110 அ | | வள்ளுவர் குடியிருப்பு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | த. குணசேகர் 110 அ வட்ட செயலாளர் |
| | | காமராஜபுரம் 4வது தெரு | | |
| | | காமராஜபுரம் விரிவு பகுதி | | |
| | | அருந்ததி நகர் | | |
| | | புஷ்பாநகர் பிரதான சலை (பச்சையம்மன் கோயில்) | | |
| | | வைகுண்டபுரம் 1வது தெரு | | |
| | | புஷ்பாநகர் Q.R. பிளாக் | | |

### ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 110 அ | | புஷ்பாநகர் 6 வது பிளாக் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | த. குணசேகர் 110 அ வட்ட செயலாளர் |
| | | புஷ்பாநகர் செங்கழனியம்மன் கோயில் | | |
| | | டேங்க் பண்ட் ரோடு | | |
| | | புஷ்பாநகர் இராமலிங்கசுவாமி கோயில் | | |
| 112 | | டிரஸ்ட்புரம் 6 வது தெரு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | வரதை த.பரி 112 வட்ட செயலாளர் |
| | | புலியூர் பிரதான சாலை | | |
| | | மைனர் டிரஸ்டபுரம் | | |
| | | வரதராஜன் பேட்டை பிரதான சாலை | | |
| | | ஆரோக்கிய சாமி தெரு | | |
| | | சுபேதார் கோட்டம் | | |
| | | சுபேதார் கோட்டம் சிறிய குடியிருப்பு | | |
| | | ஜக்கரியா காலனி 1 முதல் 5 தெருக்கள் வரை | | |
| | | புலியூர் 1வது பிரதான சாலை வரதராஜன் பேட்டை பொன்னுசாமி வாத்தியார் தெரு | | |
| | | சூளை மேடு பிரதான சாலை | | |
| | | சௌராஷ்டிரா நகர் 1 முதல் 9 வது தெரு வரை | | |
| | | நேரு தெரு | | |
| | | காந்தி சிலை அருகில் | | |
| 112 அ | | வட்ட கிளை சார்பில் பகுதி அலுவலகம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | மு. மோகன் 112 அ வட்ட செயலாளர் |
| | | சிவன் கோவில் தெரு | | |
| | | தாயாலுயம்மாள் பிரதான சாலை | | |
| | | புலியூர் ஹவுசிங் போர்டு | | |
| | | டிரஸ்ட்புரம் 6 வது தெரு | | |
| | | டிரஸ்ட்புரம் 7 வது தெரு | | |
| | | டிரஸ்ட்புரம் 8 வது தெரு | | |
| | | டிரஸ்ட்புரம் 9 வது தெரு | | |

### அண்ணாநகர் வடக்கு பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 100 | | செம்மண்பேட்டை | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | ஆ. ஏகாம்பரம் 100 வட்ட செயலாளர் |
| | | மில்லர்ஸ் ரோடு | | |
| | | ஆல்ஸ் ரோடு | | |
| | | வள்ளியம்மாள் ரோடு | | |
| | | தியாகப்பா தெரு | | |
| 100 அ | | த.பி.சத்திரம் கிளை கழகம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | கு. பாபு 100 அ வட்ட செயலாளர் |
| | | த.பி.சத்திரம் 19வது தெரு | | |
| | | காமராஜர் நகர் | | |
| | | இராணி அண்ணாநகர் | | |
| | | ஜோதியம்மாள் நகர் | | |
| | | தா.பி.சத்திரம் 32வது குறுக்குத் தெரு | | |
| 101 | | கெனால் ரோடு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | க. கோவிந்தராஜ் 101 அ வட்ட செயலாளர் |
| | | குஜ்ஜி தெரு | | |
| | | D – பிளாக் | | |
| | | வ.உ.சி. நகர் | | |
| 101 அ | | திருவீதி அம்மன் கோயில் தெரு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | சி.பி.திருமலை 101 அ வட்ட செயலாளர் |
| | | மஞ்சக்கொல்லை தெரு | | |
| | | புல்லா அவெனயூ ஸ்கேட்டிங் பார்க் ஆட்டோ ஸ்டேண்டு அருகில் | | |
| | | கதிரவன் காலனி | | |
| 102 | | பொன்னுவேல் பிள்ளை தோட்டம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | பி. சந்திரசேகர் 102 வட்ட செயலாளர் |
| | | பார்திபுரம் பிரதான சாலை | | |
| | | பிரிவரி சாலை | | |
| | | பெரியகூடல் | | |
| 102 அ | | அம்பேத்கர் நகர் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | M.G.ரவிக்குமார் 102 அ வட்ட செயலாளர் |
| | | ராயல் என்கிளேவ் ஆட்டோ ஸ்டேண்டு | | |
| | | சத்தியா நகர் | | |
| 103 | | 174 என்.எஸ்கே.பிரதான | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | P. ஜெய்சங்கர் 103 வட்ட செயலாளர் |
| | | என்.எஸ்.கே.நகர் 15வது தெரு | | |
| | | கலைவாணர் பொது நல மன்றம் | | |

### அண்ணாநகர் வடக்கு பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 103 அ | | பிரிவரி சாலை 7வது பிரதான சாலை | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் (ம) அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்டம் வழங்குதல் | கே.அருள் கண்ணன் 103 அ வட்ட செயலாளர் |
| | | நடுவங்கரை பாலம் | | |
| | | மேல்நடுவங்கரை பஜனை கோயில் தெரு | | |
| | | நியூ காலனி 12வது மெயின் ரோடு | | |
| | | எம்.ஜி.ஆர்.காலனி 10வது மெயின் ரோடு | | |

### அண்ணாநகர் தெற்கு பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 105 | 27.11.2023 | திருவீதி அம்மன் கோயில் தெரு | கொடி ஏற்றி காலை உணவு வழங்குதல் | ந. அதியமான் வட்ட செயலாளர் |
| | | இந்திரா காந்தி தெரு | | |
| | | பாஞ்சாலி அம்மன் கோயில் தெரு | | |
| | | திருவள்ளுவர் நகர் | | |
| 105அ | 27.11.2023 | விநாயகபுரம் மெயின் ரோடு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | இரா.பொன்னுரங்கம் வட்ட செயலாளர் |
| | | சத்யா நகர் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | அசோக் நகர் சந்திப்பு | உணவு வழங்குதல் | |
| | | சி - பிளாக் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | இ - பிளாக் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | ஜி - பிளாக் | மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், பென்சில் வழங்குதல் | |
| 106 | 27.11.2023 | எம்.எம்.டி.ஏ. காலனி பால் பூத் அருகில் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | ப. மகேஷ்ராஜா வட்ட செயலாளர் |
| | | என் - பிளாக், ஈ.வெ.ரா. தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | எம்.எம்.டி.ஏ. பஸ் டிப்போ | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | லோகநாத நகர் 1-வது தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | வள்ளலார் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | பெரியார் பாதை | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 106அ | 27.11.2023 | பத்மநாப நகர் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | இரா. நவீந்திரகுமார் வட்ட செயலாளர் |
| | | பெரியார் பாதை புற்று கோயில் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | பெரியார் பாதை கங்கை அம்மன் கோயில் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | விரபாண்டி நகர் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | காமராஜ் நகர் 3வது தெரு, என்.ஜி.ஓ. காலனி சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | அண்ணா நெடும்பாதை, அண்ணா சிலை அருகில் | கொடியேற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் | |
| 107 | 27.11.2023 | தண்ணீர் தொட்டி சாலை, நியு நடராஜபுரம் சந்திப்பு | சிற்றுண்டி வழங்குதல் | ம. கருணாநிதி வட்ட செயலாளர் |
| | | ரசாக் கார்டன் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | சான்றோர்பாளையம் முத்துமாரி அம்மன் கோவில் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | அய்யாவு காலனி விஜயேஸ்வரி தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | ஆசாத் நகர், நடுப்பாலம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | ஆசாத் நகர், காயிதே மில்லத் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | காந்தி சாலை | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | சத்தியமூர்த்தி தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | கண்ணப்பன் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | மங்கள் நகர் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| 107அ | 27.11.2023 | எம்.எச். காலனி, விநாயகர் கோவில் அருகில் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | வி.எம்.சிவா வட்ட செயலாளர் |
| | | இரயில்வே காலனி 4வது தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | மேத்தா நகர் ஆபிஸர் காலனி | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | யாதவாள் தெரு, அமைந்தகரை | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | பெருமாள் கோவில் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | மேத்தா நகர் ஷோபன் பாபு சிலை அருகில் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | | தெற்கு காசர் தோட்டம் வெள்ளாளர் தெரு சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |

### ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி

| வட்டம் | தேதி | இடம் | நலத்திட்ட உதவிகள் | தலைமை |
|---|---|---|---|---|
| 111 | 27.11.2023 காலை 10.00 மணி | ஆயிரம் விளக்கு அஜீஸ் முல்க் 2-வது தெரு, 5-வது தெரு சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு மற்றும் மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் | ஆர். பாபு வட்ட செயலாளர் |
| | 27.11.2023 காலை 10.30 மணி | ஆயிரம் விளக்கு அஜீஸ் முல்க் 3-வது தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | 27.11.2023 காலை 11.00 மணி | ஆயிரம் விளக்கு மூர்ஸ் சாலை, சுதந்திர நகர் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | 08.12.2023 காலை 11.00 மணி | மாடல் பள்ளி சாலை | தசை திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | |
| | 20.12.2023 பகல் 12.00 மணி | ஆயிரம் விளக்கு மூர்ஸ் சாலை சுதந்திர நகர் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| 111அ | 03.12.2023 காலை 11.00 மணி | எல்லாரி தெரு, திருவிதியான் தெரு, தாமோதரன் தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | எ.ப. பீட்டர் ஜான் வட்ட செயலாளர் |
| | 10.12.2023 காலை 11.00 மணி | 29, கிரீம்ஸ் சாலை ஆயிரம் விளக்கு | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 16.12.2023 மாலை 5.00 மணி | ரங்கூன் தெரு | கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | |
| | 24.12.2023 பகல் 12.00 மணி | மக்கீஸ் கார்டன், ஆயிரம் விளக்கு | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 30.12.2023 காலை 11.00 மணி | புத்திபேகம் தெரு ஆயிரம் விளக்கு | கொடியேற்றி இனிப்பு மற்றும் மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் | |
| 113 | 27.11.2023 காலை 10.00 மணி | 113வது வட்டத்தில் உள்ள அனைத்து தெருக்கள் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | நுங்கை ப.மகேஷ் வட்ட செயலாளர் |
| | 02.12.2023 காலை 10.00 மணி | ராமா தெரு | கொடியேற்றி இனிப்பு மற்றும் மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | |
| | 03.12.2023 காலை 10.00 மணி | மேற்கு மாட விதி | கொடியேற்றி இனிப்பு மற்றும் மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | |
| | 09.12.2023 காலை 10.00 மணி | குமரப்பா தெரு விதி | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 10.12.2023 பகல் 12.00 மணி | கிராமா தெரு | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 16.12.2023 பகல் 12.00 மணி | நியூ காலனி | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 17.12.2023 பகல் 12.00 மணி | குமரப்பா லேன் | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல், நலத்திட்ட உதவிகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள் | |
| 113அ | 27.11.2023 காலை 9.00 மணி | தர்மாபுரம் பிரதான சாலை (வட்டக் கழக அலுவலகம் அருகில்) ஆற்காடு சாலை, கார்ப்பரேஷன் லேன் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | த. தேவராஜ் வட்ட செயலாளர் |
| | 02.12.2023 காலை 10.00 மணி | கங்கைகரைபுரம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | 09.12.2023 காலை 10.00 மணி | தர்மாபுரம் 2-வது தெரு | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 17.12.2023 காலை 10.00 மணி | டாக்டர் பிரகாசம் சாலை, ஹபிபுல்லா சாலை சந்திப்பு | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 25.12.2023 பகல் 11.00 மணி | கத்திட்ரல் சாலை (பி.ஆர்.எஸ். மருத்துவமனை) | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| 113ஆ | 27.11.2023 காலை 9.00 மணி | ராமகாமத்துபுரம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | எம்.என். விஷ்ணு வட்ட செயலாளர் |
| | 03.12.2023 காலை 9.00 மணி | பார்த்தசாரதிபுரம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | 09.12.2023 காலை 11.00 மணி | ராமகாமத்துபுரம் | கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 17.12.2023 காலை 10.00 மணி | மாம்பலம் நெடுஞ்சாலை | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| 117 | 27.11.2023 காலை 9.00 மணி | 117வது வட்ட கிளைக் கழக அலுவலகம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | எஸ்.சத்தியபெருமாள் வட்ட செயலாளர் |
| | 10.12.2023 காலை 11.00 மணி | தாமஸ் சாலை | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | |
| | 01.12.2023 பகல் 12.00 மணி | திரு.வி.க. குடியிருப்பு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல், மாணவ, மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள் நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 31.12.2023 பகல் 12.00 மணி | 117வது வட்டத்தில் உள்ள கழக மகளிர் அணியைச் சார்ந்த 500 நபர்களுக்கு | புடவைகள் வழங்குதல் | |
| 117அ | 27.11.2023 காலை 9.00 மணி | விஜயராகவா சாலை, கிரியப்பா சாலை சந்திப்பு | கொடியேற்றி இனிப்பு, மாணவ, மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்குதல் | எல். தவமணி வட்ட செயலாளர் |
| | 03.12.2023 காலை 11.00 மணி | சாரங்கபாணி சாலை | கொடியேற்றுதல் மற்றும் 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் | |
| | 10.12.2023 பகல் 12.00 மணி | ஜி.என். செட்டி சாலை, காமராஜபுரம், கிரியப்பா சாலை | கொடியேற்றுதல் மற்றும் 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் | |
| | 17.12.2023 பகல் 12.00 மணி | எம்.கே. ராதா நகர் எஸ்.எஸ்.புரம் | கொடியேற்றுதல் மற்றும் 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் | |
| 118 | 27.11.2023 காலை 9.00 மணி | வி.வி.கோயில் 2-வது தெரு, புதுப்பேட்டை கிளை கழகம் | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் | கோ. யுவராஜ் வட்ட செயலா |
| | 02.12.2023 காலை 10.00 மணி | சீனிவாசா பெருமாள் சன்னதி 2-வது தெரு | கொடியேற்றி இனிப்பு வழங்குதல் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்குதல் | |
| | 10.12.2023 பகல் 12.00 மணி | வி.வி. கோயில் 3-வது தெரு | பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 17.12.2023 பகல் 12.00 மணி | சீனிவாசா பெருமாள் சன்னதி முதல் தெரு | பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் | |
| 118அ | 27.11.2023 காலை 9.00 மணி | இளங்கோ சாலை, முத்தையா தெரு நல்லான் தெரு வரதராஜபுரம் பிள்ளையார் கோயில் தெரு பீர்க்காரன் தெரு எல்லையம்மன்காலனி | கொடியேற்றி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் | எஸ்.எல்.கே.ர வட்ட செயலா |
| | 03.12.2023 பகல் 12.00 மணி | பிள்ளையார் கோயில் தெரு | பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் | |
| | 31.12.2023 பகல் 12.00 மணி | வி.வி. கோயில் 3-வது தெரு | பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் | |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், நா. எழிலன், பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், பகுதி/ வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

**நே.சிற்றரசு** செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

சமத்துவத்தை அறிவுறுத்தும் - சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின் பணிகள் தொடரட்டும்!

# திராவிட மாடல் அரசும் - நமது முதல்வரும் உங்களுக்குத் துணை நிற்பார்கள்!

## சங்கத்தின் 4-ஆவது மாநில மாநாட்டில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, நவ.27-**

**சென்னை-கலைவாணர் அரங்கில், நேற்று (26.11.2023) சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் 4-ஆவது மாநில மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இனி வரும் காலங்களிலும் சமத்துவத்தை வலியுறுத்தும் - சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பணிகள் தொடரட்டும்! உங்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசும், நமது முதலமைச்சரும் துணை நிற்பார்கள்!" என்று குறிப்பிட்டார்.**

சென்னை கலைவாணர் அரங்கில், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கங்களின் 4வது மாநில மாநாடு மற்றும் சங்கத்தின் 20வது ஆண்டு தொடக்க விழா, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பரிசு பெற்ற மருத்துவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கங்களின் 4வது மாநில மாநாடு மற்றும் சங்கத்தின் 20வது ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்தச் சங்கம் இடதுசாரி இயக்க சங்கம் என்றாலும், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எப்பொழுதும் ஒரு நெருக்கமான உறவைக் கொண்ட ஒரு சங்கம். அந்த உணர்வோடுதான் என்னை இந்த மாநாட்டிற்கு அழைத்துள்ளீர்கள். நானும் அதே உணர்வோடு அன்போடு இந்த மாநாட்டிலே கலந்து கொண்டு இருக்கின்றேன்.

திராவிட இயக்கமாகட்டும், இடதுசாரி இயக்கமாகட்டும் - இரண்டுமே சமூகச் சமத்துவத்திற்காகத்தான் தொடர்ந்து போராடி வந்து கொண்டிருக்கின்றன. சமூக சமத்துவத்தைப் பெயரிலேயே கொண்டு செயல்பட்டு வரும் உங்களுடைய சங்கத்தின் பணிகளை நான் பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

### 'நீட்'டை கடுமையாக எதிர்த்தது இந்த அமைப்பு!

உங்களுடைய எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, கோரிக்கையாக இருந்தாலும் சரி, அதில் நம்முடைய மாநில உரிமைகள்தான் முதன்மையானதாக இருக்கும். குறிப்பாக, ஒன்றிய அரசு நீட் தேர்வைத் திணித்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்த சங்கம் எதுவென்றால், அது இந்த சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கம்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு பிற அரசியல் கட்சிகள், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்த்த நீட்டை மருத்துவர்களும் எதிர்க்க, உங்கள் சங்கம் முன்னெடுத்த பணிகள்தான் மிக மிக முக்கியமான காரணம்.

### 'நீட்'டுக்கு எதிராக உண்ணாவிரதத்தில் உணர்ச்சிமிக்க உரைகள்!

அதுபோல் நீட் தேர்வு எதிர்ப்புக் களத்தில், நம்முடைய இயக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கமும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

நீட் தேர்வுக்கு எதிராகத் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி, மருத்துவர் அணி, மாணவர் அணி சமீபத்தில், ஆகஸ்ட் 20ஆம் தேதி நடத்திய தமிழ்நாடு முழுவதும் நடத்திய அந்த மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை நாம் அனைவரும் இணைந்து நடத்தினோம்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் ரவீந்திரநாத் அவர்களும் அவருடைய துணைவியார் சாந்தி அவர்களும் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உணர்ச்சி மிக்க உரையை ஆற்றினார்கள்.

உங்கள் சங்கத்தின் மருத்துவர்கள், மாணவர்கள் பலரும் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசு அமைந்ததும் நீட் தேர்வால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கண்டறிவதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில், இந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் ரவீந்திரநாத் அவர்களும் இடம்பெற்றிருந்தார். சட்டப்பேரவையில் நீட் விலக்கு மசோதா கொண்டுவரப்பட்டதில் மருத்துவர் ரவீந்திரநாத் அவர்களின் கள ஆய்வுகளும், கருத்துகளும் மிக மிக முக்கியமானவை.

### 50 லட்சம் கையெழுத்துகள்! விரைவில் இலக்கை அடைவோம்!

அந்த மசோதாவில் ஒப்புதல் பெறத்தான் இப்போது `நீட் விலக்கு நம் இலக்கு' என்ற அந்த கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி உள்ளோம். இந்த மாநாட்டில் நான் பங்கேற்க வேண்டும் என்று, என்னை அழைப்பதற்காக என்னைச் சந்தித்தபோது நம்முடைய `நீட் விலக்கு நம் இலக்கு' என்ற கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து உங்களுடைய நிர்வாகிகள் எல்லாம் கையெழுத்திட்டிருந்தார்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இலக்கு என்று அந்தக் கையெழுத்துப் போராட்டத்தைத் தொடங்கினோம். இன்றோடு 39 லட்சம் கையெழுத்துக்களை நாம் பெற்றுள்ளோம். இணையதளத்தின் மூலமாக 29 லட்சமும் போஸ்ட் கார்டுகள் மூலமாக 10 லட்சம் கையெழுத்துகளும் பெற்றுள்ளோம். அடுத்த பத்து பதினைந்து நாட்களுக்குள் அந்த இலக்கை, 50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற்று இலக்கை அடைவோம் என்று அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

### 'நம்மவர்கள் மருத்துவம் படிக்கக்கூடாது' எனும் பாசிச ஃபில்டர்கள்!

ஆனால், என்றைக்குத் தமிழ்நாட்டிலிருந்து நீட் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றதோ அன்றைக்குத்தான் ஒட்டுமொத்த மருத்துவர்களுக்கும், மாணவர்களுக்குமான அந்தப் போராட்டம் வெற்றிபெற்றதாக நாம் கருத முடியும். நீட் எதிர்ப்புக்கான அந்தக் கடிதங்கள், நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட இருக்கின்றன.

நாம் நீட்டிற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும்போது ஒன்றிய அரசு அடுத்து நெக்ஸ்ட் என்ற தேர்வைக் கொண்டு வருகிறார்கள். நெக்ஸ்ட் நாம், நெக்ஸ்ட் தேர்வை எதிர்த்துப் போராட்டத்தை நடத்த வேண்டும். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மருத்துவப் படிப்பில் நுழைவதற்கு நீட் கொண்டு வந்



தார்கள்.

இப்பொழுது மருத்துவம் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெறுவதற்கு நெக்ஸ்ட் தேர்வைக் கொண்டு வருகிறார்கள். மருத்துவப் படிப்புக்கு உள்ளே நுழைய நீட். படிப்பை முடித்து வெளியே வர நெக்ஸ்ட். இந்தத் தேர்வுகளில் எல்லாம் யார் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டும் என்பதற்கான தேர்வுகள் அல்ல.

யார் மருத்துவம் படிக்கக் கூடாது என்பதற்கான பாசிச பில்டர்களாக நாம் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மருத்துவப் பட்டம் பெற்ற மாணவர்கள் பி.ஜி. படிப்பதற்கும் நெக்ஸ்ட் கொண்டு வருகிறார்கள். மருத்துவப் படிப்பையும் சுகாதாரத் துறையையும் ஒன்றிய அரசே முழுதாகக் கன்ட்ரோல் செய்யப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து தீட்டி வருகின்றது ஒன்றிய அரசு. இந்த மாதிரி நெருக்கடியான நிலையில்தான் இந்த சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் தேவையும் அதிகமாகத் தேவைப்படுகின்றது.

ஒரு அமைப்பையோ, ஒரு சங்கத்தையோ ஆரம்பிப்பது பெரிய காரியமல்ல. அதை உயிர்ப்புடன் வைத்திருப்பது, அதன்மூலம் அந்த சங்கத்தினருக்கும், பொது மக்களுக்கும் நன்மைகளைப் பெற்றுத்தருவதுதான் மிகவும் சவாலான விஷயங்கள். அந்தச் சவாலை மிகச்சிறப்பாக இந்த சங்கம் கையாண்டு வருகின்றது. அதற்கு ஒரு உதாரணத்தை இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன்.

2007ஆம் ஆண்டு முதலமைச்சராக நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது ஒன்றிய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களை நோயாளிகள் நலச்சங்கங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு செல்வதுதான் அந்தத் திட்டம்.

### வணிக நோக்கமற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள்!

அதன்படி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான மருந்து மாத்திரைகளை விற்பனை செய்யலாம். ஆரம்ப சுகாதார நிலையத்தை விற்கலாம். ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அமைக்கலாம். இதுதான் அந்தத் திட்டம். இதை நம்முடைய, இந்தச் சங்கம் கடுமையாக எதிர்த்தது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டினார். ஏழை, எளிய மக்களுக்காக மாநில அரசினுடைய நிதியால் மாநில அரசால் உருவாக்கப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்களைக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் ஆரம்ப சுகாதார நிலையங்கள். ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டு வரும் இந்தத் திட்டத்தை, தமிழ்நாடு அரசு ஒருபோதும் ஏற்காது என்று ரவீந்திரநாத் அவர்களிடம் நம்முடைய அப்போதிருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உறுதி அளித்தார்கள்.

அதன்படி அந்தத் திட்டத்தில் 13 மாற்றங்கள் கொண்டு வந்து, ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கலைஞர் அவர்கள் பாதுகாத்தார்கள். அதன் காரணத்தால்தான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டணமின்றி, வணிக நோக்கமின்றிச் செயல்பட்டு வருகின்றன. இப்படிப் பல்வேறு பெருமைகளைக் கொண்டதுதான் இந்த சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம்.

### நமது மருத்துவக் கல்வியை உருக்குலைக்கத் துடிக்கும் சக்திகள்!

இந்திய ஒன்றியத்திலேயே சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடுதான் முன்னிலையில் இருக்கிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் இங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களாகிய நீங்கள்தான்.

இந்த முன்னேற்றம் இன்றைக்கு, நேற்றைக்கு வந்த முன்னேற்றம் அல்ல. இதற்கு விதை போடப்பட்டது 100 ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்கு மிக, மிக முக்கியமான காரணம், நீதிக்கட்சியைத் தோற்றுவித்த இருவர். டாக்டர் நடேசனார், டாக்டர் நாயர் ஆகிய இருவரும் மருத்துவர்கள். 1925ஆம் ஆண்டு அந்தக் காலகட்டம் வரை மருத்துவம் படிக்க டாக்டராக வேண்டுமென்றால் சமஸ்கிருதம் தெரிய வேண்டும் என்று இருந்தது.

அந்த விதியை முடிவுக்குக் கொண்டு வந்தவர், நீதிக்கட்சியின் பனகல் அரசர்தான். இன்னார்தான் மருத்துவம் படிக்க வேண்டும் என்று இருந்த அந்த விதியை, நம் முன்னோர்கள் தகர்த்து ஒரு நூற்றாண்டு நெருங்கும் தருணத்தில் இப்போது இருக்கின்றோம்.

1925ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைபோல, மருத்துவக் கல்வியை உருக்குலைக்கத் துடிப்பவர்களை எதிர்த்து இன்றும் போராடிக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு இன்றைக்கு உலகமே வியக்கும் வகையில் இருக்கின்றது. 2007ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சியால் இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி என்ற நிலை இங்கு உருவாகி இருக்கிறது என்றால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வை அது.

### அகில இந்திய அளவில் இடஒதுக்கீடு! உரிமையை நிலைநாட்டிய நமது முதல்வர்!

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பை மேலும் அதிகரிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 250 கோடி ரூபாய் செலவில், கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனையை, கிண்டியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலான ஒதுக்கீட்டில், மருத்துவ இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி நிலைநாட்டினார்கள்.

### விதி அல்ல! மத்திய அரசின் சதி!

இந்தச் சாதனைகளை முறியடிக்க, நடக்கும் சதிகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. ஒரு மாநிலத்தில் 10 இலட்சம் பேருக்கு 100 எம்.பி.பி.எஸ் இடங்கள் என்ற புதிய விதியை நேஷனல் மெடிக்கல் கவுன்சில் கொண்டு வந்துள்ளது. அதை விதி என்று சொல்வதை விட ஒன்றிய அரசினுடைய சதி என்றுதான், நாம் சொல்ல வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் எதிர்ப்பால் அதை அமல்படுத்துவதை இப்போது தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்கள். அது எப்போது வந்தாலும், நம்முடைய தமிழ்நாடு அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் எதிர்ப்பார்கள்.

### பணம் குவிக்கும் இடங்களாக - 'நீட்' கோச்சிங் சென்டர்கள்!

நீட் தேர்வில் நடைபெற்று வரும் குளறுபடிகள் பற்றி, என்னைவிட உங்களுக்கு அதிகம் தெரியும். தரமான மருத்துவர்களை உருவாக்குகிறோம் என்று, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்து கோச்சிங் சென்டர்களை பணம் குவிக்கும் இடமாக, நீட் தேர்வு மாற்றி உள்ளது.

இதனால் தமிழ்நாட்டில் 22 மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

இப்பொழுது தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் இந்தத் தற்கொலைகள் அதிகமாகி இருக்கின்றன. இந்தக் கொடுமைகள் போதாது என்று நீட் தேர்வில் 0 சதவீதம் இருந்தால் கூட போதும் எனப் புதுப் புதுக் குளறுபடிகளும் உள்ளே வருகின்றன.

நுழைவுத்தேர்வு என்பதே யாரெல்லாம் நுழையக்கூடாது என்பதற்கான தேர்வுதான் என்பதில் நாம் தெளிவாக இருப்பதால்தான் தொடர்ந்து நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த மாநாட்டின் மூலம் சங்கம் ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானங்களை நான் வாசித்தேன். மருத்துவத்திற்குள்ளும் பாசிஸ்ட்டுகள் அவர்களின் மதவாதத்தைத் திணித்து, நவீன அறிவியல் மருத்துவத்தை ஒழிக்க முயற்சிப்பதை எதிர்ப்பது, நீட் தேர்வைத் தொடர்ந்து அடுத்ததாக அவர்கள் திணிக்க நினைக்கும் நெக்ஸ்ட் தேர்வை எதிர்ப்பது, மருத்துவக் கல்வி, மருத்துவ சேவையில், மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்க முயல்வதை எதிர்ப்பது உள்ளிட்ட எட்டுத் தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்படுகின்றன.

இவை மருத்துவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் மட்டுமல்ல. ஒட்டுமொத்த பொதுமக்களின் நலனுக்கும் மிக மிக அவசியமானது. இந்த சங்கம் 20 ஆண்டுகால அனுபவத்தில் கோரிக்கைகள், அறப்போராட்டங்கள் மூலம் எத்தனையோ வெற்றிகள் கண்டிருக்கிறது. இங்கேயும் சில கோரிக்கைகளை இந்த நிகழ்ச்சியில் வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் மா.சு. அவர்களும் வாக்குறுதியைக் கொடுத்துள்ளார்கள். நீங்கள் வைக்கக்கூடிய கோரிக்கை அத்தனையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று கண்டிப்பாக விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்று அந்த வாக்குறுதியும் நான் இங்கே அளிக்கின்றேன்.

இனி வரும் காலங்களிலும் சமத்துவத்தை அறிவுறுத்தும் உங்களுடைய பணிகள் தொடரட்டும். உங்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் துணை நிற்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



இந்திய தேர்தல் ஆணையத்தால் நடைபெற்ற சிறப்பு தேர்தல் முகாம்களை திருத்தணி நகரத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி நேரில் சென்று பார்வையிட்டபோது. உடன் நகர செயலாளர் வி.வினோத்குமார், நகர நிர்வாகிகள் பி.எஸ்.சங்கர், ஜி.எஸ்.கணேசன், பூக்கடை கஜேந்திரன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தலைமைக் கழக சொற்பொழிவாளர் பவானி கண்ணன் இல்லத் திருமண விழாவில் தலைமை கழக சொற்பொழிவாளர்கள் க.ஒப்பிலாமணி. எழும்பூர் மோ.கோபிநாத், சேப்பாக்கம் பிரபாகரன், கந்திலி கரிகாலன், ஆலந்தூர் மலர்மன்னன், போடி காமராஜ், தூத்துக்குடி சரத்பாலா, பசும்பொன் ரவிச்சந்திரன், தூத்துக்குடி தமிழ் பிரியன், குடியாத்தம் புவியரசி, பவித்ரம், கண்ணன், திருப்பூர் மனோகர் பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வாசுகி முருகேசன்

**நவம்பர் 27 (2009)**



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



